
MALAE THEEPORI

# மாலை தீப்பொறி


2021 டிசம்பர் 16-31 தொகுதி 20 இதழ் 10 விலை ரூ.10 ஆண்டு சந்தா ரூ.150

## டிசம்பர் 18: உறுதிமொழி



வினோத் மிஸ்ரா
24 மார்ச் 1947 - 18 டிசம்பர் 1998

## பாசிசத்திற்கு எதிரான யுத்தத்தைத் தீவிரப்படுத்துவோம்


தமிழ்நாடு சிபிஐஎம்எல்
இணையதள
துவக்க விழா
டிசம்பர்-
18, 2021
சனி
CPIML
LIBERATION
மாலை
06:30
மணி
தலைமை
என் கே நடராஜன்
மாநில செயலாளர்
துவக்கி வைப்பவர்
தோழர் கவிதா கிருஷ்ணன்
அரசியல் தலைமை குழு உறுப்பினர்
வாழ்த்துரை
எஸ் வி ராஜதுரை
இடதுசாரி சிந்தனையாளர்-எழுத்தாளர்
இணைய தள வடிவமைப்பு
தோழர்கள் சஞ்சய், விகேஎஸ் கௌதம், அருன்குமார் வி

2021 டிசம்பர் 16-31

மாலெ தீப்பொறி

தொகுதி 20 இதழ் 10

இருவார இதழ்

**உள்ளே**

| | |
|---|---|
| டிசம்பர் 18 உறுதிமொழி | 4 |
| ஆயுதப்படைகள் சிறப்பு அதிகாரச் சட்டம் | 6 |
| வங்கி தனியார் மயம் | 8 |
| பாலியல் வன்கொடுமை | 11 |
| நையாண்டியும் சிரிப்பும் அடிப்படை உரிமை | 22 |

**ஆசிரியர்**

**ஜி.ரமேஷ்**

**ஆசிரியர்குழு**

**பாலசுந்தரம்**

**என்.கே.நடராஜன்**

**கே.ஜி.தேசிகன்**

**மேலாளர்**

**சொ.இரணியப்பன்**

**இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் – லெனினிஸ்ட்) தமிழ்நாடு மாநிலக்கமிட்டியின் அரசியல் ஏடு**

1/10, 11ஆவது தெரு,
கருணாநிதி நகர்,
அயனாவரம்,
சென்னை – 600023

**நிர்வாக அலுவலகம்**

3/254பி, ஜீவா தெரு,
வண்டலூர்
சென்னை – 600048

தொலைபேசி : 94435 07067
94868 59598

malaetheepori@gmail.com
cpimlthamilnadu.blogspot.com

தலையங்கம்

## இந்திய மகள்களின் மீது ரொம்பவே அக்கறை!

*பெண்கள் படிப்பதற்கு காலம் வேண்டும் என்பதற்காகவே நாங்கள் பெண்களின் திருமண வயதை உயர்த்துகிறோம். நாடு அதனுடைய மகள்களுக்காகவே இந்த முடிவை எடுத்துள்ளது என்று இந்தியப் பிரதமர் மோடி அவர்கள் கூறியுள்ளார்கள். இதனால் பெண்கள் மகிழ்ச்சியாக இருக்கிறார். சிலருக்கு அது வலியை ஏற்படுத்தியுள்ளது என்று மோடி எதிர்க் கட்சிகளைப் பார்த்துக் கூறியுள்ளார். பெண்கள் படிக்க வாய்ப்பளிக்க வேண்டும் என்பதற்காகவே பெண்களின் திருமண வயதை 18ல் இருந்து 21ஆக மாற்றியிருப்பதாகச் சொல்லும் மோடி, அவர்கள் படிப்பதற்கு என்ன வசதிகளைச் செய்து கொடுத்து இருக்கிறார். இந்தியாவில் அதிகமான குழந்தைத் திருமணங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. குழந்தைத் திருமணச் சட்டம் 2006 கிடப்பில் கிடக்கிறது. எந்த பயனும் இல்லை. ஆண்டிற்கு 1.5 மில்லியன் குழந்தைத் திருமணங்கள் இந்தியாவில் நடக்கிறது என்று யுனிசெப் கூறுகிறது. 2016 புள்ளி விவரப்படி குழந்தைத் திருமண தடுப்புச் சட்டத்தின் கீழ் பதியப்பட்ட 326 குழந்தைத் திருமண வழக்குகளில் வெறும் 35 பேருக்கு மட்டுமே தண்டனை கிடைத்துள்ளது. ஏற்கனவே செயல்படாமல் இருக்கும் குழந்தைத் தடுப்பு திருமணச் சட்டத்திலும் பெண்களின் திருமண வயதை 18ல் இருந்து 21 ஆக திருத்துவதற்கு முயற்சிக்கிறது மோடி அரசு. 18 வயது வரையே காத்திருக்காமல் தங்கள் பெண்களைத் திருமணம் செய்து கொடுத்த பெற்றோர்கள் 21 வயது வரை காத்திருப்பார்களா? குழந்தைத் திருமணங்களுக்கான சமூகக் காரணங்களை ஒழிக்காமல் வயதை உயர்த்தினால் மாற்றம் வந்து விடுமா? சமத்துவம் வந்து விடுமா? குழந்தைத் திருமணங்கள்தான் "லவ் ஜிகாத்தையும் விருப்பப்பட்டு காதல் திருமணம் செய்வதையும் ஒழிக்கும்" என்று மத்தியப்பிரதேச பாஜக எம்எல்ஏ கோபால் பார்மர் பிரச்சாரம் செய்தார். அதுபோல் இன்னும் பல சங்கிகளும் பேசுகிறார்கள். அவர்கள் மீது எந்த நடவடிக்கையும் மோடி எடுக்கவில்லையே ஏன்? இன்னொருபுறம் படிப்பு என்பது எளிய மக்களுக்கு எட்டாக்கனியாக ஆக்கி விட்டுக் கொண்டிருக்கிறது மோடி அரசின் புதிய கல்விக் கொள்கை. காவி மயமாக்கப்பட்டக் கல்விக் கொள்கை பெண்கள் படிப்பையே மறுக்கக் கூடியதாக உள்ளது. அது மட்டுமின்றி, நீட் தேர்வு போன்றவைகள் மூலம் அனிதாக்களை அவர்களுடைய கனவுகளை எட்டவிடாமல் அழித்துக் கொண்டிருக்கின்ற மோடிதான் மகள்களின் படிப்பைப் பற்றி அக்கறை காட்டுகிறார். காசியில் விஸ்வநாதர் ஆலயத்திற்கும் கங்கைக்கும் இடையே பாலம் போட்டு பாதை அமைக்கக் காட்டும் அக்கறையை, அதற்குச் செலவு செய்யும் பணத்தை பெண்களின் கல்விக்காகச் செலவு செய்யத் தயாராக இல்லாத மோடி மகளின் நலன் பற்றிப் பேசுகிறார். மகளை வேவு பார்ப்பதற்காகவே ஆட்சியைப் பயன்படுத்தியவர்தான் மகளின் படிப்பு பற்றிப் பேசுகிறார். ஊட்டச் சத்து இல்லாத காரணத்தினால் இறக்கும் குழந்தைகள், ஊட்டச் சத்து இல்லாத காரணத்தினால் இறக்கும் கர்ப்பிணித் தாய்மார்கள் எண்ணிக்கையைக் குறைப்பதற்கு வக்கற்ற அரசுதான் வருங்காலப் பெண்களின் படிப்பைப் பற்றி பேசுகிறது. இவர்களுடைய நோக்கம் பெண்களுக்குச் சமத்துவம், கல்வி கொடுப்பதல்ல. பெண்களை மேலும் அடிமைப்படுத்துவதும். அவர்களின் உரிமையைப் பறிப்பதுமேயாகும். ❑*

2021, டிசம்பர் 18 உறுதிமொழி

# பாசிசத்திற்கெதிரான யுத்தத்தைத் தீவிரப்படுத்த இகக(மாலெ)வை வலுப்படுத்துவோம்!

## விவசாயிகள் இயக்கத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றியை உறுதிப்படுத்துவோம்!

'வரலாற்றின் முக்கியமான பிரச்சனைகள் பலவும் மக்களது தெருப்போராட்டங்கள் மூலம்தான் தீர்க்கப்படுகின்றன'-

தோழர் வினோத் மிஸ்ராவின் இந்த சொற்கள், நமது அனுபவத்தில், உண்மை என்பது மீண்டுமொருமுறை நிரூபணமாகியுள்ளது. கோவிட் பெருந்தொற்றை சாதகமாக எடுத்துக் கொண்டு, தனியார் பெரும் நிறுவனங்களிடம் விவசாயத்தின் கடிவாளங்களை, மோசடியாக நிறைவேற்றப்பட்ட மூன்று விவசாயச் சட்டங்கள் மூலம் மோடி அரசாங்கம் ஒப்படைக்கப் பார்த்தது. ஆனால், பஞ்சாப் விவசாயிகள், பெருந் தொற்றுக்கு மத்தியிலும் இயக்கத்தை கட்டி எழுப்பினர். அந்த இயக்கம், நாடு முழுவது முள்ள விவசாயிகளுக்கு உத்வேகமூட்டியது. கொடூர சட்டங்களுக்கு சவால் விட்டும் பேய்ப் பிடித்தாட்டும் பரப்புரைகள், தீவிரமான தாக்குதல்களுக்கு மத்தியிலும் போராட்டத்தை ஒரு முழு ஆண்டிற்கு நீடித்து நிலைக்க வைத்துள் ளனர். இறுதியாக, இந்த ஆணவமிக்க மோடி அரசாங்கத்தை, மூன்று சட்டங்களையும் ஒட்டு மொத்தமாக ரத்து செய்யவும் வைத்துள்ளனர். இவ்வாறு விவசாயிகள் போராட்டம் வரலாறு படைத்திருக்கிறது. விவசாயிகள் இயக்கம் இத்தகையதொரு சக்திமிக்க பாசிச எதிர்ப்பு தடையரணாக வளர்ந்திருப்பதைக் காண வாய்த்திருந்தால் தோழர் வினோத்மிஸ்ரா ஆகப் பெரும் மகிழ்ச்சியடைந்திருப்பார்.

மோடி அரசாங்கம், விவசாயிகள் இயக்கத் தின் சக்தியை புரிந்து கொண்டிருக்கிறது. விவசா யிகள் இயக்கம், பெருந்தொழில் குழும மூர்க்கத் தனத்துக்கு சவால்விடும் சக்தி கொண்டிருக்கிறது; மதவாத அணிச் சேர்க்கையை ஏற்படுத்தும் ஆற்றல் கொண்ட வெடிகுண்டை செயலிழக்க வைக்கும் சக்தி கொண்டது; மேலும், தங்களது உரிமைகளுக்காகப் போராடிக் கொண்டிருக்கும் அனைத்து சக்திகள் மத்தியிலும் அனைத்தும் தழுவிய நம்பிக்கையை வரவழைக்கும் ஆற்றலை யும் கொண்டுள்ளது. மிக முக்கியமான உ.பி, பஞ்சாப் தேர்தல்கள் வரவிருக்கும் பின்னணியில், இந்தச் சட்டங்களை ரத்து செய்கிறபோது கூட, மோடி அரசாங்கம் விவசாயிகள் இயக்கத்தோடு ஒரு பேச்சுவார்த்தை அடிப்படையிலான தீர்வுக்கு வர மறுத்து விட்டது. விவசாயச் சட்டங்களை ரத்துசெய்யும் மசோதாவுக்காக சொல்லப்படும் 'நோக்கங்கள், காரணங்கள்' பற்றிய அறிக்கை, எதிர்ப்பு தெரிவித்து வரும் விவசாயிகளை மகிழ்வுறச் செய்வதற்கு மோடி அரசாங்கம் மேற்கொள்ளும் பெருந்தன்மை நடவடிக்கை என (உண்மையை) மூடி மறைத்து கூறுகிறது. ஆயினும், இந்த அரசாங்கத்தின் ஆணவமும் வஞ்சகமும் கொண்ட பரப்புரையால் அரசாங்கத்தின் தோல்வியையும் கையறுநிலையையும் மறைத்துக் கொள்ள முடியவில்லை.

லக்கிம்பூர் கேரியில் விவசாயிகள் மீது வன்முறைத் தாக்குதலை தூண்டிவிட்ட அமைச்சர் அஜய் மிஷ்ரா தெனியை பதவி நீக்கம் செய்வது, இயக்கத்தில் பங்கு பெற்ற விவசாயிகள், செயல்வீரர்கள் அனைவர் மீதான வழக்குகளை ரத்து செய்வது, அனைத்து பயிர்களுக்கும் அனைத்து விவசாயிகளுக்குமான சட்டபூர்வமான விலை உத்தரவாதம் போன்ற தங்களது பிற முக்கிய கோரிக்கைகளை விவசாயிகள் வலியுறுத் துவது முற்றிலும் சரியானதே. பஞ்சாப், அரியானா, மேற்கு உ.பி விவசாயிகள் விவசாயச் சட்டங்களைத் திரும்பப் பெறுவதற்கான போராட் டங்களை வெற்றிகரமாக தலைமை தாங்கி நடத்தி யுள்ளனர் என்றால், தற்போது மற்ற மாநிலங்கள் அதிலும் குறிப்பாக கொள்முதல் மிகக் கீழாக இருக்கிற குறைந்தபட்ச விலைக்கு குறைவாக விற்குமாறு தள்ளப்பட்டுள்ள மாநிலங்கள்,

விவசாயிகள் இயக்கத்தின் அடுத்த கட்டத்தில் பெரும் பங்கு வகித்தாக வேண்டும். தாங்கள் விளைவிக்கும் விளைபொருட்களுக்கு விவசாயிக ளுக்கு குறைந்தபட்ச ஆதார விலை மறுக்கப்படு கிறது. பெரும்பான்மையான தொழிலாளரது கடின உழைப்புக்கு குறைந்தபட்ச ஊதியம் மறுக்கப்படு கிறது. ஆனால் கம்பெனிகள், நுகர்வோர்களிட மிருந்து தொடர்ந்து அதிகரித்துவரும் அதிகபட்ச சில்லரை விலையை வசூலித்துக்கொள்ள அனுமதிக்கப்படுகிறார்கள். எனவே, குறைந்த பட்ச ஆதாரவிலைக்கான போராட்டம், வாழ்வதற் கான ஊதியத்திற்காகவும், உயர்ந்து வரும் விலைவாசியை கட்டுப்படுத்துவதற்குமான போராட்டத்துடன் இணைக்கப் படவேண்டும்.

(விவசாயிகள்) இயக்கம் வெற்றிபெற்றது எதனாலென்றால், அது பல மாதங்களாக கட்ட மைக்கப்பட்ட முயற்சிகளை மேற்கொண்டதை னாலும் விவசாயிகளை பல பத்து லட்சங்களில் தீவிர முனைப்புடனும் முறைசார்ந்த வகையிலும் திரட்டியதாலும்தான் என்பதை நாம் உணர்ந்தாக வேண்டும். விவசாயிகள் இயக்கத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றியால் உருவாக்கப்பட்டுள்ள உத்வேகம், தற்போது விரிவாக அமைப்பைக் கட்டுவதற்கும் பரந்த அரசியல் அணிதிரட்ட லுக்குமான உத்வேகமாக மாற்றப்பட வேண்டும்.

விவசாயச் சட்டங்களை ரத்து செய்வதாக அறிவித்த ஒரு வாரத்தில், அரசமைப்புச்சட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்ட நவம்பர் 26ஐ, அரச மைப்புச் சட்டத்தின் அடிப்படை உணர்வை நிராகரிப்பதற்கென்றே மோடி கையலெடுத்துக் கொண்டார். அரசமைப்பு சட்டம் பற்றி அஞ்சுகிற, அதிலும் குறிப்பாக அரசமைப்பு சட்டத்தின் முகப்புரையில் உயர்த்திப்பிடிக்கப் படும் லட்சிய உணர்வு, அரசமைப்பு சட்டத்தால் உறுதி செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளும் உரிமைகளுக்காகப் போராடும் வெகுமக்களது ஆயுதங்களாக மாறுவதைக் கண்டு அஞ்சி, உரிமைகளை கடமைகளுக்கு அடிபணியச் சொல்வதன் மூலம், பிரதமர் அரசமைப்புச் சட்டத்தை தலைகீழாக்க முற்படுகிறார். நெருக்கடி நிலையின் போதுதான், ஒரு அரசமைப்புச் சட்டத் திருத்தத்தின் மூலம் குடிமக்களுக்கான கடமைகள் என்ற ஒரு பிரிவு அரசமைப்புச் சட்டத்தில் சேர்க் கப்பட்டது என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். இந்த ஆட்சி, ஜனநாயக நிறுவனங் கள் மீதும் கூட்டாட்சி வரையறை மீதும் அரசமைப்பு சட்ட மதிப்புகள், பற்றுறுதிகள் மீதும் தாக்குதலைத் தீவிரப் படுத்திவரும் நிலையில், பாசிச எதிர்ப்புப் போராட்டத்தை வலுப்படுத் திட விவசாயிகள் இயக்கத்தின் வெற்றியிலிருந்து உற்சாகத்தைப் பெற்றிட வேண்டும். விவசாயிகள் இயக்கமும் கூட, புதுப் பாதை காட்டிய, சமக் குடியுரிமை இயக்கத்தாலும் இஸ்லாமியர்கள், பல்கலைக் கழக மாணவர்களால் சக்திபெற்ற வரலாற்று எழுச்சிமிக்க ஷாகின்பாக் மாதிரியா லும் உத்வேகம் பெற்றுதுதான்.

2021 இந்திய மக்களுக்கு ஒரு பயங்கரமான ஆண்டாக இருந்திருக்கிறது. மக்களின் உயிர் களைக் காக்கும் பொறுப்பை அரசு கைகழுவி விட்டது; மிருகத்தனமான ஒடுக்குமுறையை ஏவியது, கொடூர மக்கள் விரோத கொள்கைகளை அமல்படுத்தியும், பொதுச் சொத்துகளை திட்டமிட்ட வகையில் விற்றும் வருகிறது. ஆன போதும், வீரமிக்க போராட்டங்களாலும் ஏராள மான தியாகங்களாலும் வென்ற மக்களது வெற்றியைக் கொண்டும் இந்த ஆண்டை முடித்து வைக்கிறோம். உத்திர பிரதேசம், பஞ்சாப், உத்தர் காண்ட், கோவா, மணிப்பூர் ஆகிய மாநிலங்க ளுக்கான தேர்தல்களுடன் புத்தாண்டு துவங்கு கிறது. நம்முடைய பலம், ஆற்றல்அனைத்தையும் திரட்டி பாசிச சக்திகளை பின்னுக்குத் தள்ள, இந்த தேர்தல்களை சக்திமிக்க மக்கள் இயக்கமாக மாற்றிட வேண்டும்.

இன்று, தோழர் வி.எம்-ன் திடீர் மரணத்தின் 23வது ஆண்டை கடைப்பிடிக்கும் போது, (அவர்) கருத்தியல் துணிவையும் அமைப்பு வலுவையும் ஒன்றிணைத்து தீரமிக்க முன்முயற்சியையும் மக்களின் அறுதியிடலையும் கொண்ட சக்திமிக்க ஒரு கம்யூனிஸ்ட் கட்சியாக இகக(மாலெ)வை வளர்க்க, அவரது வாழ்நாள் முழுக்கப் போராடியதை நாம் நினைவுகூர வேண்டும். கட்சியை வலுப்படுத்துவதுதான் மக்களது வெற்றிமிக்க அறுதியிடலுக்குத் திறவுகோலாகும். சவால்கள் வளர்ந்து வருவதோடு, கட்சி விரிவாக்கத்திற்கும் அனைத்தும் தழுவிய முன்முயற்சிகள், தலையீடுகளுக்குமான மேம்ப டுத்தப்பட்ட பங்கு பணிக்கான ஏராளமான ஆற்றல்களையும் கூட நாம் அடையாளம் காண முடியும். தருணத்தைக் கைப்பற்றுவோம்; 2022 அய் இன்னும் மேலான முயற்சிகளுக்கும் இன்னும் பெரிய வெற்றிகளுக்குமான ஆண்டாக மாற்றுவோம்.

**மத்தியக் கமிட்டி,**
**இந்திய கம்யூனிஸ்ட் கட்சி**
**(மார்க்சிஸ்ட்–லெனினிஸ்ட்) (லிபரேசன்)**

# ஆயுதப் படைகள் சிறப்பு அதிகாரச் சட்டத்தை (AFSPA) ஒழித்துக் கட்டும் நேரம் வந்துவிட்டது!

*நாகாலாந்து மாநிலம்,மோன் மாவட்டம், ஓடிங் கிராமத்தில் ராணுவத்தின் சிறப்புப் படை பிரிவு சுரங்க தொழிலாளர்களை படுகொலை செய்ததோடு மட்டுமல்லாது அதை மூடிமறைக்க போலி மோதல் படுகொலைகள் நாடகமாடியதும் படுபாதக குற்றச் செயலாகும். உள்துறை அமைச்சர் அமித் ஷாவும் அவருடைய ராணுவ அதிகாரிகளும் சம்பவத்தை நடந்து விட்ட 'தவறு' என்று விளக்கமளிக்க எடுக்கும் முயற்சிகளால் பாஜகவின் சொந்த உறுப்பினர்களையும் அவர்களின் வடகிழக்கு மாநில கூட்டாளிகளையும் கூட இணங்க வைக்க செய்யமுடியவில்லை.*

*போராளிகள் நடமாட்டம் குறித்து 'நம்பத்தகுந்த உளவுத்துறை தகவல்' கிடைக்கப் பெற்றதால் ஒரு வாகனத்தில் நிறைத்துக் கொண்டு சென்ற சிவிலியன்கள் மீது அதிரடி தாக்குதலும் துப்பாக்கிச் சூடும் நடத்தியதில் வேலை முடித்து வீடு திரும்பிக் கொண்டிருந்த சுரங்கத் தொழிலாளர்கள் 6 பேர் சம்பவ இடத்திலேயே கொல்லப்பட்டனர் என்று சொல்லப்படுகிறது. ஆனால், அவர்கள் சொல்லும் சாக்குப்போக்கு பல காரணங்களால் அற்பத்தனமானதாக உள்ளது.*

*முதற்கட்டமாக இந்த கொலை பட்டப்பகலில் ஜன நெருக்கடி நிறைந்த சாலையில் நடந்தேறியுள்ளது. இரண்டாவதாக,உள்ளூர் காவல் துறையினருக்கு தகவல் தெரிவிக்கவும் அவர்களையும் நடவடிக்கையில் ஈடுபடுத்தவும் தவறியதன் மூலம் உரிய கடைபிடிக்க வேண்டிய விதிமுறைகளை துருப்புகள் மீறி இருக்கின்றன. மேலும் (எதிர்த் தரப்பிலிருந்து) எவ்வித தூண்டுதலும் இல்லாத நிலையில் துருப்புகள் எவ்வித எச்சரிக்கையும் விடுக்காமல் துப்பாக்கிச் சூட்டை நிகழ்த்தியுள்ளனர். வாகனத்தில் வந்தவர்கள் யார் என்பதை அடையாளப்படுத்திப் பார்ப்பதற்கான எவ்வித முயற்சியும் எடுக்கப்படவில்லை உண்மையிலேயே அந்த வாகனம் போராளிகளை ஏற்றிக்கொண்டு வந்திருந்தால் கூட நடந்த சம்பவம் மனித உரிமை மீறலாகவே கொள்ளப்படும்.*

*உள்ளூர் மக்கள் இந்த படுகொலை பற்றி கேள்விப்பட்டு விசாரிக்கச் சென்றபோது ஆயுதப்படை துருப்புகள் "மோதல் படுகொலை"என சித்தரிப்பதற்கான ஏற்பாடுகளை செய்து கொண்டிருந்ததாக அவர்கள் சொன்னார்கள். நியாயமான கோபாவேசத்துடன் சிவிலியன்கள் உள்ளூர் இராணுவ தலைமை இடம் முன்பு போராட்டத்தில் ஈடுபட்டார்கள். அதை அடுத்து மீண்டும் சிவிலியன் போராட்டக்காரர்கள் மீது கண்மூடித்தனமாக துப்பாக்கிச் சூடு நடத்தி 7 பேரை கொன்றொழித்தார்கள். பிறகு*

அந்த இடத்தை விட்டு கிளம்பி சென்று விட்டதாக சொல்லப்பட்ட சிறப்பு படைகள், செல்லும் வழியில் இருந்த சுரங்க தொழிலாளர்களின் குடியிருப்புகள் மீதும் கூட துப்பாக்கிச்சூடு நடத்தினார்கள். மொத்தத்தில் அதிரடி தாக்குதல் மற்றும் அதைத் தொடர்ந்து நடைபெற்ற தாக்குதல்களில் 15 சிவிலியன்கள் இதுவரை கொல்லப்பட்டிருக்கிறார்கள் மற்றும் பலர் கடுமையாக காயமுற்றிருக்கிறார்கள்.

இந்தச் சம்பவம் விதிவிலக்காக தவறுதலாக நடந்த ஒன்றல்ல. வடகிழக்கு மாநிலங்களில் அதுபோல் காஷ்மீர், பஸ்தார் மற்றும் இதர மோதல் பகுதிகளில் கொலைகளை செய்துவிட்டு அவற்றை 'போலி மோதல்' என்று நாடகமாடுவது இயல்பானதாக உள்ளது. ஆயுதப்படைகள் சிறப்பு அதிகாரச் சட்டத்தின் மரபியல் 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தை ஒடுக்க 1942ல் பிரயோகப்படுத்தப்பட்ட ஆயுதப்படை சிறப்பு அதிகார அவசர சட்டத்தில் உள்ளது. வெட்கக் கேடான விதத்தில் காலனிய வேர்களைக் கொண்ட இந்த சட்டம் 1958லிருந்து வடகிழக்குப் பகுதிகளில் இந்திய சட்டமாக நடைமுறையில் இருந்து வருகிறது.

கொலை, துன்புறுத்தல் மற்றும் பாலியல் வன்புணர்வு என்று கூட குற்றம் சாட்டப்பட்ட ஆயுதப் படையினருக்கு குற்றவியல் நடவடிக்கை களிலிருந்து ஆயுதப்படை சிறப்பு அதிகாரச் சட்டம் பாதுகாப்பு அளிக்கிறது. எனவேதான் ஓடிங் படுகொலை சம்பவத்தில் நாகாலாந்து காவல்துறை சிறப்பு படை பிரிவுக்கு எதிராக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்திருந்த போதிலும் மத்திய அரசின் அனுமதி இல்லாமல் அவர்களால் குற்றவியல் நடவடிக்கைகளை மேற்கொண்டு எடுத்துச் செல்ல முடியவில்லை. மேலும், அது போன்ற (மத்திய அரசின்) அனுமதி ஒருபோதும் வழங்கப்படுவதும் இல்லை. 2004இல் மணிப்பூரில் தஞ்சம் மனோரமா கூட்டுப்பாலியல் வன்கொடுமை செய்து கொலை செய்யப்பட்ட வழக்கில் அசாம் துப்பாக்கி படைப்பிரிவினர் குற்றவாளிகள் என்று நீதித்துறை விசாரணை கண்டு கொண்ட பின்பும் குற்றவாளி கள் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்க முடியாமல் ஆயுதப்படைகள் சிறப்பு அதிகாரச் சட்டம் இதுநாள் வரை பாதுகாத்து வருகிறது.

சிவிலியன்கள் மீதான இராணுவ வன் கொடுமை நிகழ்த்துவதற்கான தலையாய காரணமாக ஆயுதப்படை சிறப்பு அதிகாரச் சட்டம் இருக்கின்ற காரணத்தால், வடகிழக்கு மக்கள் அதற்கு எதிராக நீண்ட காலமாக போராடி வருகிறார்கள். மணிப்பூரிலுள்ள அசாம் துப்பாக்கி படைத் தலைமையகம் முன்பு "இந்தியப் படையே எங்களை பாலியல் வல்லுறவு செய்து கொள்" என்ற பதாகையுடன் ஆடைகளை அவிழ்த்துவிட்டு பெண்கள் நடத்திய போராட்டம் என்பது முடை நாற்றமடிக்கும் ஆயுதப்படை சிறப்பு அதிகார சட்டம் மீதான களங்கமாக இன்றளவும் உள்ளது.ஆனால், அடுத்தடுத்து வந்த பலவகை அரசாங்கங்கள் ஆயுதப்படை சிறப்பு அதிகார சட்டத்தை ஒழித்துக்கட்ட மறுத்து விட்டன அல்லது வடகிழக்கு, காஷ்மீர், பஸ்தார் அதுபோல் மற்ற இடங்களில் சிவிலியன்களுக்கு எதிரான குற்றச் செயல்களுக்கு இராணுவத்தின ரையும் துணை ராணுவ படையினரையும் பொறுப்பாக்கவும் மறுத்துவிட்டன. கடந்த இரண்டு தசாப்தங்களில் மணிப்பூரில் நிகழ்ந்த 1500 போலி மோதல் தொடர்பான வழக்குகள் உச்ச நீதிமன்றத்தில் நீதி கேட்டு இன்றளவும் காத்து நிற்கின்றன.

இராணுவத்தினரின் போலி மோதல் படுகொலைகள், பாலியல் வன்புணர்வு பிரச்சினைகளை எழுப்புகின்ற மனித உரிமைப் பாதுகாவலர்களை தேச விரோதிகள் என்று பாஜக முத்திரை குத்துகிறது. தேசத்துரோக வழக்கு கொண்டு அவர்களை மிரட்டி வருகிறது. ஜே கேசிசிஎஸ் என்ற அமைப்பைச் சார்ந்த காஷ்மீரின் முன்னணி மனித உரிமைப் பாதுகாவலர் குர்ரம் பர்வேஷ் சமீபத்தில் கைது செய்யப்பட்டு கொடிய உபா (UAPA) சட்டத்தில் புனையப்பட்ட குற்றச் சாட்டுகளை எதிர்கொள்கிறார். ஓடிங்கில் சமீபத்தில் நடைபெற்ற சம்பவம் போல் காஷ்மீர் பள்ளத்தாக்கில் பல படுகொலைகளை 'மோதல் படுகொலை' என மூடி மறைக்கப் பார்ப்பது உள்ளிட்ட பல்வேறு சம்பவங்களை ஜேகே சிசிஎஸ் பிரயத்தனப்பட்டு ஆவணப்படுத்தி மனித உரிமைகளை முன்னெடுக்கும் அமைப்பாக நன்கு அறியப்பட்டதாகும்.

இப்போது பாஜகவின் கூட்டாளிகளாக இருக்கக்கூடிய நாகாலாந்து, மேகாலயா முதல மைச்சர்கள் ஆயுதப்படை சிறப்பு அதிகார சட்டத்தை ரத்து செய்ய வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர். மோன் மாவட்ட பாஜக தலைவர், தன் மீதும் சிவிலியன்கள் மீதும் ஆயுதப் படையினர் துப்பாக்கிச்சூடு பிரயோகப் படுத்தியதாகவும் போலி மோதல் கொலை என நாடகமாட அவர்கள் முயற்சித்ததாகவும் குற்றம் சாட்டுகிறார்.

ஆயுதப்படை சிறப்பு அதிகார சட்டத்தை ரத்து செய்வதோடு கூடவே அந்தப் பகுதி ராணுவமயப்படுத்தப்படுவதிலிருந்து விடுவிப்ப தையும், கடந்த கால இராணுவ நடவடிக்கையின் மனித உரிமை மீறலுக்கு பொறுப்பாக்கப்படு வதையும் நீதி கோருகிறது. வடகிழக்கு மாநிலம் மற்றும் காஷ்மீர் பகுதிகளில் நடந்த மனித உரிமை மீறலுக்காக கடந்த காலங்களில் உத்தரவிடப்பட்ட விசாரணைகள் கூட வெட்கக்கேடான விதத்தில் நடைபெற்று, குற்றச்செயல் புரிந்தவர்கள் எவ்வித தண்டனையுமின்றி தப்பிவிட்டார்கள்.

மேலும் ஓடிங் விசாரணையும் அதுபோல் ஆயுதப்படைகள் மீதான மற்ற குற்றச்சாட்டுகளும் வெளிப்படையான சிவிலியன் நீதிமன்றங்களில் நடத்தப்பட வேண்டும். நடைபெற்றுவரும் எல்லா ஆயுத மோதல்களிலும் சர்வதேச மனிதாபிமான, மனித உரிமை சட்டங்கள், அரசமைப்புச் சட்ட நெறி முறைகள் பின்பற்றப்பட வேண்டும்.

இராணுவத் தீர்வுக்கு எதிராக நாடு எழுந்து நின்று இராணுவ துருப்புகளிடமிருந்து பொறுப்புடைமையை கோருவதற்கான சரியான தருணம் இது.மொத்த நாடும் எதிர்ப்புப் போராட்டத்தில் எழுந்துநின்று ஆயுதப்படை சிறப்பு அதிகார சட்டத்தை நீக்க இறுதி சம்மட்டி அடி கொடுக்க வேண்டும். நாம் சுதந்திரத்தின் 75வது ஆண்டைக் கடைப்பிடிக்கும் போது, காலனிய ஆட்சியின் மரபியல் கொண்டுள்ள ஆயுதப்படை சிறப்பு அதிகார சட்டத்திலிருந்து விடுபட வேண்டிய தருணமாக இது அமைந் துள்ளது. மோதல் பகுதிகளின் ஒவ்வொரு கொட்டடி வன்முறைக்கும் நீதியையும் பொறுப்பாக்குதலையும் உத்தரவாதம் செய்வோம்.

**எம்எல் அப்டேட் தலையங்கம்**
**14–20 டிசம்பர் 2021**
**தமிழாக்கம் – தேசிகன்**

# மணப்பாறையில் மனு கொடுக்கும் போராட்டம்

திருச்சி மாவட்டம், மணப்பாறை தாலுகா சமுத்திரம் ஊராட்சியில் வீடு, வீட்டு மனைபட்டா, குடிநீர் வசதி, பொதுக் கழிப்பறை வசதி ஏற்படுத்திடவும் 100 நாள் வேலையில் முறையான சம்பளம் வழங்க வேண்டியும் மனு கொடுக்கும் போராட்டம் சமுத்திரம் இகக(மாலெ) கிளைச் செயலாளர் மாசிலாமணி தலைமையில் நடைபெற்றது. இந்த போராட்டத்தில் மாவட்டக் குழு உறுப்பினர் வழக்கறிஞர் சக்திவேல், வழக்கறிஞர் ராஜ்குமார், மணப்பாறை நகரச் செயலாளர் பாலு அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழக மாவட்டப் பொறுப்பாளர் தோழர் அந்தோணியம்மாள், தோழர் தங்கராஜ் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர். இந்த ஆர்ப்பாட்டத்தில் சமுத்திரம் பகுதி மக்கள் நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். இகக(மாலெ) திருச்சி மாவட்டச் செயலாளர் தோழர் தேசிகன் கலந்துகொண்டு ஊராட்சி மன்றத் தலைவரிடம் மனு கொடுக்கப்பட்டது.



# வங்கி தனியார்மயம் ஒரு பேரழிவு மிக்க எண்ணம் - உடனே நிறுத்து!

*கார்ப்பரேட் சார்பு வேளாண் சட்டங்களிலிருந்து பின் வாங்கும்படி நிர்ப்பந்திக்கப்பட்ட போதும்கூட மோடி அரசாங்கம் இன்னொரு கேந்திர துறையான வங்கியில் தேசியமயமாக்கலை பின்நோக்கிச் செலுத்த மூர்க்கத்தனமாக அழுத்தம் கொடுத்து முயற்சிக்கிறது. வரலாற்று சிறப்புமிக்க வங்கி தேசியமயமாக்கல் நடந்து ஐந்து தசாப்தங்களுக்கு பிறகு அரசாங்கம் இப்போது பொதுத்துறை வங்கிகளில் அரசாங்க பங்கை குறைந்தபட்ச அளவான 50 சதவீதத்தில் இருந்து 26 சதவீதமாக குறைக்க அவசரகதியில் முயற்சிப்பதோடு சில பொதுத்துறை வங்கிகளை ஒட்டுமொத்தமாக தனியார்மயமாக்கவும் நடவடிக்கை எடுக்கிறது. பொதுமக்கள் பார்வையில் தனியார் வங்கிகள் என்றால் ஆபத்து என்ற எண்ணம் இருக்கும் போது பொதுத்துறை வங்கிகள் நிலையானவை நம்பத் தகுந்தவை என்று பெயர் பெற்றிருப்பதை அரசாங்கம் அறிந்தே வைத்திருக்கிறது. அதனால்தான், "வைப்பீடு செய்பவர்களே முதன்மையானவர்கள்" என்ற வாய்ச்சவடால் முழக்கத்தை அரசாங்கம் தனியார்மயமாக்கலுக்கு போவதற்கு முன்பு முன்வைக்கிறது. ஒருவேளை வங்கி வீழ்ச்சி அடைந்தால் 90 நாட்களுக்குள் வைப்புநிதி வைத்திருப்பவர்களுக்கு ரூபாய் 5 லட்சம் (கடைசியாக 1993 இல் தான் ரூபாய் ஒரு லட்சம் என்று உயர்த்தப்பட்டது) திரும்ப தரப்படும் என்ற உறுதிமொழியை அளிக்கிறது.*

*இந்திய வங்கிகளில் மொத்த வைப்பு நிதியின் அளவு வங்கி தேசியமயமாக்கப்பட்ட கடந்த 50 ஆண்டுகளில் சீராக வளர்ந்து வந்துள்ளது. பின்னர் சமீப காலங்களில் படு வேகமாக அதிகரித்துள்ளது. பிப்ரவரி 2011 இல் 50 ட்ரில்லியனாக இருந்த வைப்புநிதி செப்டம்பர் 2016 இல் 100 ட்ரில்லியன் ஆக உயர்ந்து 2021 மார்ச் முடிவில் 150 ட்ரில்லியன் ரூபாய்களை தாண்டி இருப்பதன் மூலம் கடந்த பத்தாண்டு காலத்தில் வைப்புநிதி மூன்று மடங்கு வளர்ந்துவிட்டது. தனியார் வங்கிகளை ஊக்குவிப்பது அதிகரித்து வந்த போதிலும் இப்போதும்கூட இந்திய பொதுத்துறை வங்கிகளின் மொத்த வைப்பு நிதி 2/3 பங்காக உள்ளது. பணமதிப்பிழப்பு நடவடிக்கை கருப்புப் பண விசயத்தில் அற்பசொற்ப தாக்கத்தை ஏற்படுத்தியது. ஆனால், அது நிச்சயமாக அதிகமான மக்களை வங்கியை நோக்கி தள்ளியிருக்கிறது. சமீபகாலங்களில் டிஜிட்டல் பரிவர்த்தனை பயன்பாடு வளர்ந்து வந்துள்ளதும் கூட வங்கிகளின் வளர்ச்சியில் பெரும் பங்காற்றியுள்ளது. வங்கி தனியார்மயம் என்பது பொதுமக்கள் சேமிப்பிலிருந்து உருவாக்கப்பட்ட மாபெரும் நிதி ஆதாரங்கள் மீது தனியார் கம்பெனிகள் தங்களது நேரடி கட்டுப்பாட்டை நிறுவ ஏற்பாடுகளை செய்து தருவதுதான்.*

வங்கித்தொழில் நெருக்கடிக்கான தீர்வாக தனியார்மயமாக்கத்தை முன் தள்ளுவது என முன் மொழியப்பட்டது. இந்த நெருக்கடிக்கு மிகப் பெரிய பங்களிப்புச் செய்யும் காரணியாக செயல் படா சொத்து என்று மென்மையான வார்த்தை களில் அழைக்கப்படும் NPA (non performing asset) இருந்து வருகிறது. வங்கி கடன்கள் எப்போதுமே திரும்பி வராத தொகை என்னும் குறிப்பிட்ட ஆபத்தை எதிர் கொள் கின்றன. ஆனால் அந்த உள்ளார்ந்த ஆபத்து, கடன் அளிக்கும் நெறிமுறைகள் கறாராக பின்பற்றப் படும் வரை, அரசு சார்பு முதலாளித்துவம் மற்றும் வர்த்தக அரசியல் கூட்டின் நிர்பந்தங்க ளுக்கு புத்திசாலித்தனமான வங்கியியல் நடவடிக்கைகள் விலையாக கொடுக்கப்படாத வரை, இப்போதுள்ள NPA நெருக்கடி போன்ற அந்த அளவு மட்டத்தை ஒருபோதும் எட்டியதில்லை. வங்கி விதி முறைகளை தாராள மயப்படுத்தியது குளறுபடிகளை மோசமாக்கியது என்றால், வேண்டு மென்றே கடனை திருப்பி செலுத்தாதவர்களுக்கு தண்டனையிலிருந்து பாதுகாப்பு அளிப்பது என்பது அதை இன்னும் மிக மோசமான நிலைக்கு தள்ளிவிட்டது.

பிரச்சனையின் அளவை கீழே கொடுக்கப் பட்டுள்ள புள்ளிவிவரங்களில் இருந்து தெளிவாக தெரிந்து கொள்ளலாம். கடந்த 10 ஆண்டுகளில் ரூ 11,68,095 கோடி கிட்டத்தட்ட 11.7 ட்ரில்லியன் மதிப்புள்ள கெட்ட கடன்கள் (bad loans) தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன. அவற்றுள் 2014–15 மோடி ஆட்சி காலகட்டத்திலிருந்து மட்டும் ரூ. 10.72 ட்ரில்லியன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. தொழில்நுட்ப ரீதியாக சொல்லவேண்டுமானால் தள்ளுபடி செய்யப்பட்ட கடனையும் கூட மீண்டும் இன்றளவும் வசூல் செய்ய முடியும். ஆனால், அதுபோன்ற வசூல் 15%ஐக் கூட தாண்டவில்லை. அதே நேரத்தில் அவ்வப்போது சில தள்ளுபடிகள் நடந்தாலும் வாராக்கடன் தொடர்ந்து வளர்ந்து கொண்டே போயிற்று. கடந்த 10 ஆண்டுகளில் ரூ.12 மில்லியன் மதிப்புள்ள கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்ட பிறகும் வாராக்கடன் தொடர்ந்து ரூ.6 டிரில்லி யனை சுற்றியே தொடர்கிறது.

வங்கிகள் தேசியமயத்தைத் தொடர்ந்து முன்னுரிமை கடன்களுக்கு விவசாய கடன், சிறு குறு தொழில்கள், வீடு, கல்வி, சமூக உட்கட்டமைப்பு திட்டங்கள் ஆகியவற்றுக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டது. எப்படி இருந்த போதும், மிகப்பெரும் என்பிஏ எனப்படும் வாராக்கடன் வேறு இடத்தில், முதன்மையாக கார்ப்பரேட் துறையில் உருவாகியிருந்தது. தனியார்மயமாக்கப்பட்டால் முன்னுரிமை கடன் பாதிக்கப்படும். வங்கித்துறை தொடர்ந்து பங்குச்சந்தை மூலமும் மற்றும் இதர குறுகிய காலத்தில் லாபம் ஈட்டித் தரும் முதலீடுகள் நோக்கியும் தள்ளப்படும்.வங்கி சீர்திருத்தங்கள் அதோடு இணையான ஓய்வூதிய சீர்திருத்தங் களோடு சேர்ந்தே வருகிறது என்பதை கவனிக்க வேண்டும். அதன்படி ஓய்வூதியத் துறையில் வெளிநாட்டு முதலீடு என்பது 49% என்பதிலிருந்து 74% என்பதாக உயர்த்தப்படுகிறது ஓய்வூதிய நிதியும் கூட விரைவான லாபம் பெறுவதற்காக பங்குச்சந்தைக்கு திருப்பப்படுகிறது.இது இந்தியாவின் நிதித்துறையில் ஸ்திரமற்ற தன்மையை கொண்டு வருவதற்கான கச்சிதமான நடவடிக்கையாகும். இதுவரை உலக அளவில் நிதி நெருக்கடி நிகழ்ந்த போதெல்லாம் இந்தியா அதிலிருந்து மீண்டு வந்திருக்கிறது. இந்திய நிதித்துறையின் நிலைத்ததன்மையும் தாக்குப் பிடிக்கும் திறனும் இப்போது அதிகரித்த அளவிலான நெருக்கடிக்கும் தாக்குதலுக்கும் உள்ளாகிறது.

சாமானிய மக்கள் தங்களது சொந்த வைப்புத் தொகையின் பாதுகாப்பு பற்றி மட்டும் கவலை கொண்டிருக்கவில்லை, வங்கி முறையின் ஒட்டுமொத்த திசைவழி மற்றும் செயல்பாட்டு திறன் பற்றியும் அதே அளவு கவலை கொண்டிருக்கிறார்கள். வங்கியை சாமானிய மக்களிடம் எடுத்து செல்வேன் என்னும் மோடியின் வாய்ச்சவடால் ஒருபுறம் இருக்க, தங்களது சொந்தப் பணத்தை வங்கியில் வைப்ப தற்குக் கூட பயன்பாட்டு வரி கட்ட வேண்டி இருப்பதன் மூலம் வங்கிச் சேவை தொடர்ந்து (சாமானிய மக்களுக்கு) அதிகரித்த செலவினத்தை உண்டு பண்ணுவதாகவே அமைந்துவிட்டது. பெரும் தொழில் குழுமங்கள் வேண்டுமென்றே வாங்கிய கடனை திருப்பி செலுத்த மறுக்கும் போதும் அவர்கள் எப்படி தப்பித்து விடுகிறார்கள் என்பதை நாம் கண்டு வருகிறோம். அதேவேளை, விவசாயிகள், நுண் நிறுவனங்களில் கடன் பெற்றவர்கள், இதர சிறு கடனாளிகள், மாணவர்கள், வேலை தேடுபவர்கள், வர்த்தகர் கள் என சிறிய அளவில் கடன் பெற்றவர்கள் உரிய நேரத்தில் தங்களது சிறிய கடனை திருப்பி செலுத்த முடியவில்லை என்றால் கடும் துன்புறுத்தலுக்கு ஆளாக்கப் படுகிறார்கள் சிறிய கடனை உரிய நேரத்தில் திருப்பிச் செலுத்த

*முடியாமல் தற்கொலை செய்து கொள்பவர்களும் உண்டு. வட்டி வீதங்கள் சரிந்து வருவதால் தங்களுடைய சேமிப்புக்கு நிலையான வட்டி கிடைக்கும் என வங்கியை சார்ந்திருந்த ஓய்வூதி யர்களுக்கும் மத்தியதர உபயோகிப்பாளர்களுக் கும் இது கடுமையான காலகட்டமாக உள்ளது.*

*அரிதாக வங்கிகள் திவாலாகும் போது மட்டும் வைப்புநிதி வைத்திருப்பவர்களின் நலன் பாதிக்கப்படுவது என்பதில்லை. ஆனால், அதே அளவு வங்கிகள் சாமானிய மக்களுக்கு பாதுகாப்பற்றதாகவும் அதிக செலவு பிடிப்ப தாகவும் இருக்கும்போது பாதிப்பை ஏற்படுத்து கிறது. அதுபோல் கடுமையான உழைப்பின் காரணமாக வரும் பொது சேமிப்பிலிருந்து திரட்டப்பட்ட நிதி ஆதாரங்களை தனியார் லாபங்களைப் பெருக்கிக் கொள்ள பயன்படுத்தும்போதும் வங்கியில் வைப்பு நிதி வைத்திருப்பவர்களின் நலன் பாதிக்கப்படுகிறது. ஆகவே சாமானிய மக்கள் எல்லோரும் பேரழிவு மிக்க வங்கி தனியார்மய யோசனையை தடுத்து நிறுத்த வங்கி ஊழியர்களோடு இணைந்து கொள்ள வேண்டும். எப்படி விவசாயிகள் தங்களது சொந்த ஒன்றுபட்ட போராட்டத் தினாலும் மக்கள் ஆதரவினாலும் வெற்றி பெற்றார்களோ அதுபோல் இந்திய வங்கிகளையும் நிதித்துறையையும் பாதுகாக்க, தனியார் மயமாக்கலுக்கு எதிராக வங்கி ஊழியர் நடத்துகின்ற போராட்டக் களமும் பரந்த ஆதரவையும் ஒத்துழைப்பையும் பெற தகுதி உடையதாகும்.*

**எம்எல் அப்டேட் – தலையங்கம்**
**7–13 டிசம் 2021**

**– தமிழாக்கம் தேசிகன்**

# பாலியல் வன்கொடுமைகளுக்கு முடிவு கட்டுமா காவல்துறையைக் கையில் வைத்துள்ள மு.க.ஸ்டாலின் அரசு?

*"பாலியல் வன்முறைக்கு பலியாகும் கடைசி மாணவி நானாகத்தான் இருக்க வேண்டும்" என்று கடிதம் எழுதி வைத்து விட்டு இன்னுயிரை மாய்த்துக் கொண்ட, கரூர் பரணி பார்க் பள்ளி மாணவியின் தற்கொலைக்கு காரணமான குற்றவாளிகள் இன்றுவரை கண்டுபிடிக்கப் படவோ, கைது செய்யப்படவோ இல்லை என்பது, காவல்துறை யாரையோ காப்பாற்ற முயற்சி செய்கிறதா? என்ற கேள்வியை எழுப்புகிறது.*

*கரூரில் உள்ள செல்வாக்குமிக்க கோடீஸ் வரர்களால் நடத்தப்படும், பரணி பார்க் பள்ளி யில் 12ஆம் வகுப்பு படித்து வந்த மாணவிதான் அப்படி எழுதிவைத்துவிட்டு தற்கொலை செய்து கொண்டார். மருத்துவர் கனவோடு இந்தப் பள்ளியில் சேர்ந்து நீட் தேர்வுக்கு தன்னை தயார்படுத்திக் கொண்டிருந்த இந்த மாணவி தன் கனவு நிறைவேறும் முன்பாகவே "என்னை பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கிய நபரின் பெயரை எழுத பயமாக இருக்கிறது. இந்த பூமில வாழணும்னு ஆசப்பட்டேன். ஆனா பாதிலயே போறேன். பாலியல் வன்முறைக்கு ஆளாகி உயிரைவிடும் கடைசி மாணவி நானாகத்தான் இருக்க வேண்டும்" என்று எழுதி வைத்துவிட்டு தூக்கில் தொங்கிவிட்டார். சம்பவம் நடந்து 25 நாட்கள் முடிந்த நிலையில், அவர் தூக்கில் தொங்க காரணமான நபரை காவல்துறை இன்று வரை கண்டுபிடிக்கவில்லை.*

*நவம்பர் 19 அன்று பள்ளி முடிந்து அழுது கொண்டே வந்த அந்த மாணவி,வீட்டில் யாரும் இல்லாத நிலையில் தூக்குமாட்டிக் கொண்டார். பின்னர் மாணவியை உடல் மருத்துவக் கூராய்வுக்கு எடுத்துச்சென்ற நிலையில், மாணவியின் உறவினர்கள் வெங்க மேடு காவல் நிலையத்திற்கு புகார் கொடுக்கச் சென்றுள்ளனர். அந்த காவல்நிலையத்தில் இருந்த காவலர், ஆய்வாளர் வரும் வரை காத்திருக்குமாறு கூறி அங்குள்ள பெஞ்சில் அமரச் சொல்லியிருக்கிறார். சற்றுநேரத்தில் அங்கு வந்த ஆய்வாளர் கண்ணதாசன் "இந்த அக்யூஸ்டுகளை ஏன் அமர வைத்தாய்" என்று சொல்லி அவர்களை ஆபாச வார்த்தைகளால் திட்டியும் அடித்தும் லாக்கப்பில் தள்ளியிருக்கிறார். அத்தோடு பலியான மாணவி யின் தாயாரை வரச்சொல்லி, தகாத வார்த்தைக ளால் அவரை இழிவாக பேசிய தோடு, அவர்தான் அவர் மகளை தற்கொலைக்குத்*

தூண்டியிருக்கிறார் என்று குற்றஞ்சாட்டியுள்ளார். அவரையும் அவருடன் வந்தவர்களையும் இரவு முழுவதும் காவல் நிலையத்திலேயே அடைத்து வைத்து துன்புறுத்தியுள்ளார். அடுத்த நாள், மருத்துவமனையில், கூராய்வு முடிந்த உடலை பார்க்கக்கூட விடாமல் கையெழுத்து வாங்கிக் கொண்டு மின்மயானத்தில் உடலை தகனமும் செய்துள்ளனர்.

பின்பு பல்வேறு சமூக ஆர்வலர்கள், இயக்கங்கள் இந்தப் பிரச்சினை குறித்து போராட ஆரம்பித்த பிறகு மேற்படி காவல் ஆய்வாளர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

நடந்த சம்பவங்களைக் கேள்விப்பட்ட வுடன், சிபிஐஎம்எல் கட்சி மாவட்டச் செயலாளர் தோழர் மு.இராமச்சந்திரன், முற்போக்கு பெண்கள் கழக தேசிய குழு உறுப்பினர் தோழர் பிலோமினா ஆகியோர் உயிரிழந்த மாணவியின் வீட்டிற்கு நேரில் சென்று ஆறுதல் கூறினர். நடந்த விவரங் களைக் கேட்டறிந்தனர். குற்றவாளிகளை உடனடி யாகக் கைது செய்ய தொலைக்காட்சி ஊடகத்தின் வாயிலாக வலியுறுத்தினர்.

பரணி பார்க் பள்ளி மாணவியின் தற்கொலை யும் அது தொடர்பான நிகழ்வுகளும் அப்பள்ளி மாணவர்கள், கரூர் அரசு கலைக் கல்லூரி மாணவர்கள் மத்தியில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்திய நிலையில், 23.11.2021 ஆம் தேதியன்று, பல்வேறு பள்ளி, கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்கள் கரூர் பேருந்து நிலையம் அருகில் மாலை 5.00 மணியிலிருந்து இரவு 8.30 மணி வரை குற்றவாளிகளைக் கைது செய்ய வலியுறுத்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். தோழர் பிலோமினா (AIPWA), தோழர் நிர்மல் (RYA), தோழர் சந்திரசேகரன் (CPIML) ஆகியோர் மாணவர்களுக்கு உறுதுணையாக போராட்டத்தில் கலந்துகொண்டனர். அடுத்த நாள் (24.11.2021), மாணவர்கள், கரூர் அரசு கலைக் கல்லூரியில் நூற்றுக்கணக்கில் அணிதிரண்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகம் நோக்கி பேரணியாகச் சென்றனர். இந்தப் பேரணியில் தோழர் பிலோமினா, தோழர் மெஜோ (AISA) ஆகியோர் பங்கேற்றனர். காவல் துறையால் பேரணி இடைவழியில் மறிக்கப்பட்டது. மாவட்ட ஆட்சியரும், மாவட்ட காவல் கண்காணிப் பாளரும் மாணவர்களை நேரில் சந்தித்துப் பேசி நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்த பின்னர் போராட்டம் தற்காலிகமாக விலக்கிக் கொள்ளப் பட்டது. கீதாஞ்சலி என்ற ஏடிஎஸ்பி தலைமை யில் ஒரு விசாரணைக் குழு அமைக்கப்பட்டது. ஆனால், அந்த விசாரணைக்குழு கண்துடைப்பாக ஓரிரு நாட்கள் பள்ளியில் விசாரணை நடத்திய தோடு, எந்தவித முன்னேற்றமுமின்றி கிணற்றில் போட்ட கல்லாக வழக்கு இருக்கிறது.

இந்நிலையில், சிபிஐஎம்எல் கரூர் மாவட்டக்குழு சார்பாக, 29.11.2021 அன்று பத்திரிகை செய்தி வெளியிடப்பட்டது. 30.11.2021 அன்று, அகில இந்திய முற்போக்குப் பெண்கள் கழகம் தலைமையில், அகில இந்திய மாணவர் கழகம், புரட்சிகர இளைஞர் கழகம் இணைந்து கரூர் வட்டாட்சியர் அலுவலகம் முன்பு, நீதி கேட்டு நடத்திய ஆர்ப்பாட்டத்தில், சிபிஐ (எம்எல்) தோழர்களும் திருச்சி, திண்டுக்கல், மதுரை, புதுக்கோட்டை மாவட்டங்களிலிருந்து முற்போக்கு பெண்கள் கழகத் தோழர்களும், மக்கள் அதிகாரம், புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணி, சாமான்ய மக்கள் நலக் கட்சி உள்ளிட்ட கரூரின் ஜனநாயக சக்திகளும், கலந்து கொண்டு போராட்டத்தை சிறப்பித்தனர். அடுத்த நாள் அந்த மாணவியின் தாயாரை நமது தோழர்கள் இராமச்சந்திரன், ராஜசேகர், பிலோமினா, கிருஷ்ணவேணி ஆகியோர் நேரில் சந்தித்து பேசினர். மன ரீதியாகவும், உடல் ரீதி யாகவும் பாதிக்கப்பட்ட நிலையில் மாணவியின் தாயார் இருந்த நிலையில், அங்கிருந்த அவரின் உறவினர், காவல்துறையினர் தங்களை மிரட்டுவதாக கூறினார். நமது தோழர்கள் உடனடியாக விசாரணைக்குழு அதிகாரி கீதாஞ்சலியை சந்தித்து காவல்துறையின் அத்துமீறல்களை சுட்டிக்காட்டி அவர்கள் குடும்பத்தினருக்கு பாதுகாப்பு அளிக்கும்படி கோரினோம். நமது கோரிக்கைக்கு செவிசாய்த்த போதிலும்,வழக்கு விசாரணைப் பற்றி எதுவும் கூற மறுத்து விட்டார்.

ஆனால் நமது தோழர்களின் விடாமுயற்சி காரணமாக மாணவியின் தாயாரையும் உறவினர்க ளையும் அழைத்துப்பேசி, CBCID விசார ணைக்கோரி மாவட்ட ஆட்சியரிடம் மனு ஒன்றினை அளிக்கச்செய்திருக்கிறோம்.

இந்த ஒட்டுமொத்த நிகழ்விலும், காவல் ஆய்வாளர் கண்ணதாசன் பணியிடை நீக்கம் செய்ததைத் தாண்டி காவல்துறையின் விசாரணை யில் எந்த முன்னேற்றமும் இல்லாதது, கரூர் மாவட்ட ஆட்சியர் மற்றும் கரூர் மாவட் டத்தைச் சேர்ந்த அமைச்சர் செந்தில் பாலாஜி ஆகியோரிடமிருந்து இந்த வழக்கு தொடர்பாக நம்பிக்கை அளிக்கக்கூடிய செய்தி எதுவும் இல்லாதது ஆகியவை காரணமாக இந்த வழக்கு இன்னமும் ஆழமான, விரிவான போராட்டங்

களைக் கோருவதாகவே நாம் புரிந்து கொள்ள வேண்டும். அதுமட்டுமின்றி "தமிழக மாணவி களே! என்னை உங்கள் பெற்ற தகப்பனாக நினைத்து இனிமேல் இதுபோன்று உங்களின் இன்னுயிரை மாய்த்துக்கொள்ளாதீர்கள்" என்று உருக்கமான உரையாற்றிய தமிழக முதல்வருக்கு நாம் விடுக்கும் செய்தியாதெனில், உங்கள் கட்டுப்பாட்டில் உள்ள காவல்துறையை புகார் கொடுக்க செல்லும் அப்பாவி மக்களை குற்றவாளிகள் ஆக்காமல், உண்மையான குற்றவாளிகளைக் கண்டுபிடித்து நீதியின்முன் நிறுத்தச் சொல்லுங்கள். 'ஜெய்பீம்' பார்த்து நீங்கள் தூக்கமின்றி தவித்தது ஓர் இரவுதான். ஆனால் எண்ணற்ற மக்கள் காவல்துறையின் அத்து மீறல்கள், அராஜகப்போக்குகளால் பல நூறு நாட்கள் தூக்கமின்றித் தவித்துக்கொண்டிருக் கிறார்கள். தமிழக முதல்வராக உங்கள் கீழ் இயங்கும் காவல்துறையை நேர்மையாக இயங்க செய்வதும் இனியும் இதுபோன்ற பாலியல் வன்முறை நடந்திடாதவண்ணம் வருங்கால பெண்ணினத்தை பாதுகாக்கும் நடைமுறைகளை வகுத்திடவும் கோருகிறோம்.

**–கிருஷ்ணவேணி, பிலோமினா**

# ஆஷா (ASHA) ஊழியர்களை அரசு ஊழியர்களாக்க வேண்டும்

சமீப மாதங்களில் உத்தர பிரதேச தலைநகர் லக்னோ, தொடர்ச்சியான போராட்டங்களைக் கண்டது நவம்பர் 22–ல் விவசாயிகள் பஞ்சாயத்து, நான்கு தொழிலாளர் சட்டத் தொகுப்புகளைத் திரும்பப்பெற வேண்டுமென தொழிலாளர்களின் போராட்டம், மதிய உணவுத் தொழிலாளர்களின் போராட்டம், பழைய ஓய்வூதிய திட்டம் திரும்பக் கொண்டுவரப்பட வேண்டுமென போராட்டம், மேலும் தங்களுடைய கோரிக்கைகளுக்காக டிசம்பர் 13ல் ஏஐசிசிடியு உடன் இணைந்துள்ள ஆஷா தொழிலாளர்கள் பின்வரும் கோரிக்கைக ளுக்காக போராட்டம் நடத்தி உத்தர பிரதேச முதமைச்சரிடம் மனு கொடுத்தனர். ஆஷா ஊழியர்களுக்கு அரசு ஊழியர் அந்தஸ்து; மாத ஊதியம் ரூ. 21,000; ரூ.10 லட்சத்திற்கு மருத்துவக் காப்பீடு; ரூ.50 லட்சத்திற்கு ஆயுள் காப்பீடு; மகப்பேறுகால மற்றும் மருத்துவ விடுப்பு.

போராட்டக் கூட்டத்தில் உரையாற்றிய திட்டப் பணியாளர் சங்கத்தின் தேசிய ஒருங்கிணைப்பாளர் தோழர் சசி யாதவ், நாடு முழுவதும் ஆஷா தொழிலாளர்கள் வெவ்வேறு பெயர்களில் வேலை செய்கிறார்கள். அவர்களுக்கு மாறுபட்ட ஊதியங்கள் வழங்கப்படுகிறது. இது தொழிலாளர் சட்டங்களை அப்பட்டமாக மீறுவதாகும். ஆஷா ஊழியர்கள் தங்களது உயிரை பணயம் வைத்து கொரானாவிற்கு எதிராகப் போராடினார்கள். ஆனால் அவர்களின் நியாய மான கோரிக்கைகளை அரசாங்கம் கொஞ்சமும் செவி கொடுத்து கேட்கவில்லை. பொய்யான மோதல் கொலைகளுக்கு இழிபெயர் பெற்ற யோகி அரசாங்கமானது ஷாஜகான்பூரில் ஆஷா தலைவர் பூனம் பாண்டேவை கொலை செய்ய முயற்சித்தது. வரவிருக்கும் தேர்தலில் யோகி அரசாங்கத்திற்கு தகுந்த பாடம் கற்பிக்குமாறு ஆஷா ஊழியர்களை தோழர் சசி யாதவ் கேட்டுக் கொண்டார்.

இந்தப் போராட்டக் கூட்டத்தில் ஏஐசிசிடியு தேசியப் பொதுச் செயலாளர் தோழர் ராஜீவ் திம்ரி, ஆஷா சங்கத்தின் மாநில ஒருங்கிணைப் பாளர் சரோஜினி பிஷ்த், ஆஷா தலைவர் அமர்ஜித் கௌர் உள்ளிட்ட பல தலைவர்கள் உரையாற்றினார்கள். அனிதா மிஸ்ரா மற்றும் அப்ரோஷ் ஆலம் ஆகியோர் இதனை வழி நடத்தினார்கள்.

பல்லாண்டுகளாக ஆஷா ஊழியர்கள் அனைத்துவித ஆபத்துக்களை எதிர்கொண்டும், அவர்களுடைய கடின உழைப்பாலும் திறமை யாலும் பொது சுகாதாரத்தின் அடிக்கட்டு மானத்தை வலுப்படுத்தியுள்ளார்கள். மேலும், மகப்பேறு சமயத்தில் தாய்சேய் இறப்பின் விகிதத்தை கட்டுப்படுத்தி, இந்தியாவிற்கு உலக அரங்கில் பெருமை தேடித் தந்துள்ளார்கள். பல்வேறு தொற்று நோய்களைக் கட்டுப்படுத்தத் தங்களுடைய இன்னுயிரைப் பணயம் வைத்துள்ளார்கள். மேலும், மிகச் சாதாரணமான பாதுகாப்பு உபகரணங்கள் கொடுக்கப்பட்ட போதும் கூட, கோவிட் 19 போன்ற பயங்கரமான பெருந்தொற்றை வீழ்த்துவதற்கு, முன்னணியில் நின்று போராடி உதவி புரிந்துள்ளார்கள். தடுப்பூசி போடுவதில் பெற்ற வெற்றிக்காக, அரசாங்கம் தன்னைத்தானே பாராட்டிக் கொள்கிறது. ஆஷா ஊழியர்களின் மிகப்பெரிய பங்களிப்பின்

காரணமாகவே இதனை அடைய முடிந்தது. ஆனால் எவரும் அவர்களுடைய உரிமைகள், தேவைகள் பற்றி கவலை கொள்ளவில்லை. வெட்கக்கேடான மிகச்சிறிய கௌரவ ஊதியத்திற்காகவும், கேவலமான வேலை நிலைமைகளிலும் அவர்கள் இரவும் பகலும் வேலை செய்யப் வைக்கப்படுகிறார்கள். ஆனால், இந்த அரசாங்கமோ, அவர்களின் பிரச்சனை களைப் பற்றி மௌனமாக இருக்கிறது. ஆஷா ஊழியர்கள் இப்போது தங்களுடைய குரல் இந்த அரசாங்கத்தைச் சென்றடையவும் அவர்களுடைய அடிப்படை உரிமைகளை வென்றெடுக்கவும், போராட்டப் பாதையை தேர்ந்தெடுத்து விட்டனர்.

**கோரிக்கைகள்:**

1. அனைத்து ஆஷா ஊழியர்களுக்கும், அரசு ஊழியர் அந்தஸ்து வழங்க வேண்டும்.
2. ஆஷா ஊழியர்களுக்கு, ரூ.21,000 மாத சம்பளம்.
3. ஆஷா ஊழியர்களுக்கு, ஊதியத்துடன் கூடிய மகப்பேறு கால விடுப்பு மற்றும் மருத்துவ விடுப்பு.
4. கொரானா உதவித்தொகை, தடுப்பூசி, கோவிட் கணக்கெடுப்பு, மற்ற வேலைகள் உள்ளிட்டவை களுக்கு வழங்கவேண்டிய நிலுவைத் தொகையை உடனடியாக வழங்க வேண்டும்.
5. பணியிடங்களில் பாலியல் துன்புறுத்தலுக்கு எதிராக, மாவட்ட அளவிலான பாலின கூருணர் குழுக்கள் அமைக்கப்பட வேண்டும்.
6. மருந்தகங்களிலிருந்து மருத்துவமனை வரை அனைத்து மட்டங்களிலும் ஆஷா ஊழியர்கள் தவறாக நடத்தப்படுவது நிறுத்தப்பட வேண்டும்.
7. ஆஷா ஊழியர்கள் ஓய்வு எடுப்பதற்கு அனைத்து மருந்தகங்களிலும் பொது அறைகள் அமைக்க வேண்டும்.
8. ஆஷா ஊழியர்களுக்கு குறிப்பிட்ட வேலை நேரங்களைத் தீர்மானிக்க வேண்டும்; அவர்களின் வேலைகளோடு தொடர்பில்லாத கூடுதல் வேலைகளை செய்யக் கட்டாயப்படுத்தக்கூடாது.
9. ஆஷா ஊழியரின் குடும்பத்தினருக்கு இலவச மருத்துவ வசதி செய்து தரப்பட வேண்டும்; ஆஷா ஊழியர்களுக்கு ரூ. 10 லட்சத்திற்கான மருத்துவக்காப்பீடு உறுதி செய்யப்பட வேண்டும்.
10. கோவிட் பெருந்தொற்றுக்கு எதிரான போராட்டத்தின் முன்னணி படை வீரர்களான ஆஷா ஊழியர்களுக்கு ரூ.50 லட்சத்திற்கான ஆயுள் காப்பீடு உறுதி செய்யப்பட வேண்டும்.

இந்தப் போராட்டக் கூட்டத்தில் உத்தர பிரதேசத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்தும் ஆஷா ஊழியர்கள் பெருமளவு கலந்து கொண்டனர். அவர்களோடு பல்வேறு அமைப்புகளின் பிரதிநிதிகளும் ஒருமைப்பாடு தெரிவித்து கலந்து கொண்டனர். ❑

# ‘விடுதலைப் போராட்ட இயக்கமும் பிரிவினையும்’ கருத்தரங்கு

**நை**னிடால் மக்கள் மன்றம் சார்பில் டிசம்பர் 10 அன்று, 'விடுதலைப் போராட்ட இயக்கமும் பிரிவினையும்' மீதான கருத்தரங்கு நைனிடாலில் நடைபெற்றது. முக்கிய பேச்சாளரான அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழகத்தின் தேசிய செயலாளர் தோழர் கவிதா கிருஷ்ணன்,

இன்றைய காலகட்டத்தில், விடுதலைப் போராட்ட இயக்கத்தின் வரலாற்றைத் திரும்பிப் பார்க்க வேண்டிய அவசியத்தையும் முக்கியத்து வத்தையும் வலியுறுத்திப் பேசினார். சுதந்திர இந்தியாவின் 75வது ஆண்டில் மோடி அரசாங்க மானது, வேண்டுமென்றே வரலாற்றைத் திரித்தும் பொய் கூறியும், விடுதலைப் போராட்டத்தையும் பிரிவினையையும் பற்றி ஒரு வகுப்புவாத பார்வையை நம் முன்னே வைக்கிறது. இதன்மூலம் தனது மதவெறிப் பரப்புரையை முன்கொண்டு செல்ல அனைத்து வகையிலும் முயற்சிக்கிறது. விடுதலைப் போராட்டத்தோடு தொடர்புடைய இடங்களுக்கு அளிக்கப்படு வதற்கு இணையாக, மதம் சார்ந்த இடங்களுக்கும் மரியாதை அளிக்க வேண்டுமென, மோடி கேதார்நாத்தில் பேசும்போது வேண்டுகோள் விடுத்தார். 'மதத்தை பாதுகாத்ததற்கான' அவர்களது 'வரலாற்றுப் பாத்திரத்தை' வலியுறுத்தி கூறினார். இதன்மூலம், விடுதலைப் போராட்டம் மற்றும் பலரின் தியாகங்களுக்குப் பிறகு பெற்ற சுதந்திரத்தின் வரையறையை மாற்றுவது என்ற அவர்களின் திட்டம், மேலும் ஒரு படி முன் சென்றது. இந்த தருணத்தில், விடுதலை இயக்கத்தின் உண்மையான மரபையும், விடுதலைப் போராட்டத்தின் போது நிகழ்ந்த மதவெறி பற்றியும் மக்களிடம் எடுத்துச்செல்ல வேண்டியது, வேறு எப்போதை யும் விட இப்போது மிகவும் முக்கியத்துவம்

வாய்ந்ததாக உள்ளது.

மத்தியகால வரலாற்றிலிருந்து பல உதாரணங்களைச் சொல்லி, எவ்வாறு, பல்வேறு மன்னர்களுக்கு இடையிலான மோதல்களையும் சண்டைகளையும் இந்துமுஸ்லிம் சண்டைகளாக நம்முன் வைத்து, வரலாற்றை வகுப்புவாத நோக்கில் மாற்றி எழுதுகிறார்கள் எனத் தோழர் கவிதா கிருஷ்ணன் சுட்டிக்காட்டினார். நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ், இராஜாஜி போன்ற விடுதலைப் போராளிகள், சாவர்கர், கோல்வால்கர், சியாமா பிரசாத் முகர்ஜி போன்ற இந்து மகாசபை மற்றும் ஆர்எஸ்எஸ்-ன் முக்கியத் தலைவர்களின் புத்தகங்கள் மற்றும் கட்டுரைகளைக் குறிப்பிட்டு, விடுதலைப் போராட்டம் பற்றிய 'சங்'-ன் பார்வையையும், இந்து மகாசபை மற்றும் ஆர்எஸ்எஸ்-ன் ஆங்கிலேய ஆதரவையும் தெளிவாக்கினார். ஆங்கிலேய அரசின் நலன்களைப் பார்த்துக் கொண்டதும், இந்திய தேசிய இயக்கத்தை சுதந்திரத்திற்கான போராட்டமாக ஏற்றுக்கொள்ள மறுத்ததுமே, 'சங்'-ன் பார்வையாகும். விடுதலைப் போராட்டத்தின் மாபெரும் கதாநாயகனாக இன்றைக்கு சாவர்க்கரை முன்னிறுத்த, ஆர்எஸ்எஸ்-பிஜேபியினர் தங்களாலான பெரும் முயற்சிகளைச் செய்கிறார்கள். ஆனால் அவரோ, ஆங்கிலேயர்களுக்கு இறவா விசுவாசத்தை வாக்குறுதியாக கொடுத்ததோடு, விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்ற 'தவறு'க்காக மன்னிப்பும் கோரினார். மேலும், இந்துக்களும் முஸ்லிம்களும் வெறுமனே இரண்டு மதங்களை அல்ல, மாறாக இரண்டு தேசங்களைச் சார்ந்தவர்கள், எனவே, அவர்கள் இருவரும் ஒருபோதும் ஒன்றிணைந்து வாழ இயலாது என்று சொல்லி இருநாடு கருத்தை முதன்முதலில் அவரே முன்வைத்தார். சாவர்க்கரின் இந்தக் கருத்தைத் தான் இந்து மகா சபையும் முஸ்லிம் லீக்கும் மேலும் விரிவாக்கி னார்கள். அதுவே பிரிவினைக்கு வழிவகுத்தது.

'வாட்ஸ்அப்' பல்கலைக்கழகப் பரப்புரை வழியாக வரும் தவறான செய்திகளைப் படித்து, ஏற்றுக்கொள்வதற்கு மாறாக விடுதலைப் போராட்டம், மத்திய கால வரலாறு பற்றிய சிறந்த வரலாற்று அறிஞர்கள் எழுதிய புத்தகங்களைப் படிக்க வேண்டுமென தோழர் கவிதா, அனைவருக்கும் அதிலும் குறிப்பாக இளைஞர்களுக்கு கோரிக்கை விடுத்தார்.

இந்த நிகழ்ச்சிக்கு புகழ்பெற்ற வரலாற்று அறிஞர் பேராசிரியர் சேகர் பதக் தலைமை தாங்கினார். சிபிஐ எம்எல் கர்வால் செயலாளர் இந்த்ரேஷ் மைகுரி, 'விடுதலைப் போராட்டமும் உத்தரகண்டில் தலித்துகளும்' என்ற தலைப்பில் பேசினார். இந்த நிகழ்ச்சியை வழக்கறிஞர் கைலாஷ் ஜோஷி வழிநடத்தினார். மேலும், குமாங்க் பல்கலைக்கழக ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் வழக்கறிஞர்கள், விவசாயிகள், ஓய்வுபெற்ற ஊழியர்கள், ASHA சங்கத்தினர், ரிக்சா சங்கத்தினர், குதிரை ஓட்டும் சங்கத்தினர் உட்பட பெரும் எண்ணிக்கையிலான மக்கள் இதில் கலந்து கொண்டனர். ❑

**எம்எல் அப்டேட்**
**14–20 டிசம் 2021**

**தமிழாக்கம் – செந்தில்**

# மோசடி நிதி நிறுவனத்திற்கு எதிராக....

திருச்சி மாவட்டம் மணப்பாறை கோவில்பட்டி ரோட்டில் இயங்கி வரும் ஐஐஎப்எல் கோல்டு பைனான்ஸ் நிறுவனம் பொதுமக்கள் மற்றும் நடுத்தர ஏழை விவசாயிகளிடம் நகைகளை அடமானம் என்ற பெயரில் வாங்கி மோசடி செய்து வருகிறது. ஐஐஎப்எல் பைனான்ஸ் நிறுவனம். பாதிக்கபட்டோர் சென்று கேட்டால், எந்த ஒரு முன்அறிவிப்பு இன்றி நகை ஏலம் போய்விட்டதாக நிர்வாகம் சார்பாக தகவல் தெரிவிக்கின்றனர். மேற்படி பைனான்ஸ் நிர்வாகத்தின் மோசடிகளைக் கண்டித்து சிபிஐஎம்எல் சார்பாக 20.12.2021 அன்று மணப்பாறை கோவில்பட்டி சாலையில் ஐஐஎப்எல் கோல்டு பைனான்ஸ் நிர்வாகத்தின் அலுவலகம் முன்பு சிபிஐஎம்எல் நகரச் செயலாளர் பி.பாலு தலைமையில் தர்ணா போராட்டம் நடைபெற்றது. இந்த போராட்டத்தில் வட்டச் செயலாளர் வழக்கறிஞர் வி.சக்திவேல் சிறப்புரை ஆற்றினார். இந்த போராட்டத்தில் மணவை ஒன்றிய செயலாளர் ஆவா.இளையராஜா மற்றும் தோழர்கள் அருள்குணசேவியர், இளையராஜா, தங்கராஜ், தனலட்சுமி மற்றும் மேற்படி நிறுவனத்தால் பாதிக்கபட்டவர்களும் கலந்து கொண்டனர். காவல் ஆய்வாளர் கருணாகரன் ஒரு வாரத்தில் உரிய முடிவு எடுப்பதாக கூறியதை அடுத்து போராட்டம் தற்காலிகமாகக் கைவிடபட்டது. ❑

# 18 வயதானவர்கள் அரசாங்கங்களை தேர்ந்தெடுக்க முடியுமென்றால் மணந்து கொள்வதா எப்போது மணந்து கொள்வது யாரை மணந்து கொள்வது என்பதை தேர்வு செய்யும் உரிமையை பெண்களுக்கு ஏன் மறுக்க வேண்டும்?

*பெண்களது திருமண வயதை 21 ஆக உயர்த்துவது என்ற ஒன்றிய அமைச்சரவையின் தவறான ஆலோசனை உடனடியாக திரும்பப் பெறப்பட வேண்டும்.*

வயது வந்த அனைவருக்குமான திருமண வயது 18 ஆக இருக்க வேண்டும். எனவே, ஆண்களுக்கான திருமண வயதும் 18 ஆக குறைக்கப்பட வேண்டும். 18 வயதானவர்கள் வயது வந்தோர், அவர்கள் அரசாங்கத்தை தேர்ந்தெடுக்க முடியும், நாட்டின் எதிர்காலத்தை முடிவு செய்ய அந்த வயது போதுமென்றால் அவர்கள் தங்களது சொந்த எதிர்காலத்தையும் திருமணம் செய்து கொள்வதா, எப்போது மணந்து கொள்வது, யாரை மணந்து கொள்வதென்பதை முடிவு செய்து கொள்ளும் போதுமான வயது கொண்டவர்கள் என்பதையும் நாம் ஒப்புக் கொண்டாக வேண்டும்.

இளவயது கருவுறுதல், இளம் பெண்களது ஆரோக்கியத்தையும் அதனால், குழந்தைகளது ஆரோக்கியத்தையும் மோசமாக பாதிக்கச் செய்வது உண்மையே; அது இளம் பெண்களது கல்வி யிலும் குறுக்கிடுகிறது. பெண்களது விருப்பத் துக்கு மாறாக, அவர்களது பெற்றோர்களால் முன்கூட்டியே திருமணம் செய்து கொள்ளுமாறு நிர்ப்பந்திக்கவும் படுகிறார்கள். நாட்பட்ட ரத்த சோகை, ஊட்டச்சத்தின்மை, பெண்களது சீர்குலைக்கப்பட்ட கல்வி இவற்றுக்கான தீர்வு 21 வயதுக்கு குறைவான திருமணங்களை குற்றமயமாக்குவதில் இல்லை; மாறாக, முற்றிப்போன வறுமைக்கு தீர்வுகாணபதில் தான் உள்ளது.

சிறுவர் திருமணத்தை குற்றமயமாக்கும் சட்டத்தை செயல்படுத்துவதில் ஏற்கனவே அரசாங்கம் தோற்றுக் கொண்டிருக்கிறது என்பதுதான் யதார்த்தம். கட்டாயத்தினால் முன்கூட்டிய திருமணம் என்ற பிரச்சனைக்கு விடை, இளம் பெண்களது சுயாட்சியை மதிப்பதை, ஆதரிப்பதை வளர்த்தெடுப்பதில்தான் இருக்கிறது. வேறு சொற்களில் கூறுவதாயின், இளம் பெண்களை, அவர்களது விருப்பத்திற்கு எதிராக பெற்றோர்கள் திருமணத்துக்கு நிர்ப்பந்திக் கிறபோது, அரசாங்கம் உதவி மய்யங்களை அமைத்துக் கொடுப்பதும் ஆதரவு தருவதும் செய்திட வேண்டும். பெண்கள், தங்களது சொந்த வாழ்வின் மீது கட்டுப்பாடு கொண்டிருக்கிற, அது தொடர்பாக தங்களது சொந்த முடிவை எடுக்கக் கூடிய பெண்களது உரிமையை ஆதரிக்கிற சமூக பரப்புரையில் நம்பிக்கை கொள்ள (முதலீடு செய்ய) வேண்டும். பால் வேறுபாடின்றி, 18 வயதுக்கு மேற்பட்ட வயதுவந்த அனைவரும் தாங்கள் மணந்து கொள்ள வேண்டுமா, எப்போது மணந்து கொள்வது, யாரை மணந்து கொள்வது என்பது பற்றிய முடிவெடுக்கும் உரிமையைக் கொண் டிருக்க வேண்டும்.

2013 – 14ல் இந்து (நாளேடு) மேற்கொண்ட ஒரு ஆய்வில் தில்லி விசாரணை நீதிமன்றத்துக்கு வந்த வல்லுறவு வழக்குகளில் 40% வழக்குகள் வல்லுறவு வழக்குகள் அல்ல, மாறாக, பெற்றோர்கள், சமூகத்தினரது வன்முறை, பலவந்தத்திலிருந்து தப்பித்து தங்கள் காதலர் களை மணந்து கொள்ள இருதரப்பும் இசைந்து ஓடிப்போனதன் மீது தொடுக்கப்பட்ட வழக்கு களாகும். இந்தியாவில் காப் பஞ்சாயத்துகள், சமூக பேரவைகள் மட்டுமின்றி சங்கி கும்பல்களும் சாதி மறுப்பு திருமணங்கள் மீதும் மத மறுப்பு திருமணங்கள் மீதும் தாக்குதல் தொடுத்து வருவது தெரியும். இது போன்ற நேர்வுகளில், வயதுவந்த பெண்கள் 'வயது வராதோர்' என்று தவறாக சித்தரிக்கப்படுவதும் அவர்கள் 'பாதுகாப்பு இல்லங்களில்' சிறைவைக் கப்படுவதும் அந்த இல்லங்களிலிருந்து அவர்கள் சுதந்திரம் பெற வேண்டுமாயின் தங்களது சாதி மறுப்பு, மத மறுப்பு உறவுகளை உதறிவிட்டு தங்கள் பெற்றோர்களது வீட்டுக்குச் செல்ல ஒப்புக் கொண்டால் மட்டுமே முடியும். மேலும், இப்பேர்ப்பட்ட பலவந்தப்படுத்தும் பெற்றோர் களும் அமைப்புகளும் திருமணம் குறித்த

*பிரச்சனையில் பெண்களது வயதுவந்த பருவம் குறித்து தேர்ந்தெடுத்த வகையில் மறுப்பதற்கு இப்போது ஒரு சட்டத்தைப் பெறப்போகின்றன.*

*அமைச்சரவை முன்மொழிதல் பெண்களை அதிகாரப்படுத்தாது, மாறாக, பெண்களது சுயாட்சியின் மீது வன்முறையை ஏவுகிற சக்திகளுக்கு அதிகாரம் அளிப்பதை மட்டுமே செய்யும்.*

*எனவே, அமைச்சரவை தனது முன்மொழிவை திரும்பப் பெற வேண்டுமென்று அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழகம் கோருகிறது; மேலும், வயது வந்தோர் அனைவரது உரிமையை, அதாவது 18 வயதுக்கு மேற்பட்ட அனைத்து தனி நபர்களும் யாரைக் காதலிப்பது அல்லது மணந்து கொள்வது என்பது உள்ளிட்ட வாழ்க்கையின் எல்லா விஷயங்களிலும் முழு சுயாட்சியை அனுபவிக்கும் உரிமையை மதிக்கிற வகையில் இப்போதுள்ள சட்டங்கள் அனைத்தையும் திருத்திட வேண்டுமென்றும் கோருகிறது.* ❑

**ரதி ராவ், தலைவர், அஇமுபெக**
**மீனா திவாரி, பொதுச்செயலாளர், அஇமுபெக,**
**கவிதா கிருஷ்ணன், செயலாளர், அஇமுபெக**

# சுமை தூக்கும் தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம்







*16.12.2021 அன்று தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக சனநாயக அங்காடிகள் சுமைதூக்குவோர் மற்றும் பொது தொழிலாளர் சங்கம் (ஏஐசிசிடியு) சார்பாக திருப்பூர் டிஎன்சிஎஸ்சி மண்டல மேலாளரின் தொழிலாளர் விரோத போக்கைக் கண்டித்து திருப்பூரில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் சங்கத்தின் மாநில பொதுச்செயலாளர் கோவிந்தராஜன் மற்றும் பாலசுப்பிரமணியன், தாமோதரன், நாராயணன் செந்தில், செல்வராஜ், பழனிசாமி உள்ளிட்ட தோழர்கள் கலந்துகொண்டனர். நெல்லையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் ஏஐசிசிடியு மாவட்டப் பொதுச் செயலாளர் தோழர் கே.கணேசன் கலந்து கொண்டார்.*

**ஆட்சி மாறியது. ஆனாலும் காட்சிகள் மாறவில்லை.**

ஸ்டெர்லைட் போராட்டத்தில் போலீஸால் கொல்லப்பட்டவர்களுக்கு நீதி கேட்டு ஆட்சிக்கு வந்த திமுக தான், ஃபாக்ஸ்கான் தொழிலாளர்ளின் கோரிக்கைகளுக்கு நியாயம் கேட்டுப் போராடுபவர்களை காவல்துறைக் கொண்டு ஒடுக்குகிறது.

தமிழ்த்தாய் வாழ்த்து அவசியமில்லை என நீதிபதி சொன்னதற்காக அவசர அவசரமாக அரசாணையை தயார் செய்கிற இதே அரசுதான், நீதிபதியின் உத்தரவைக் காட்டி, சென்னையில் ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக வசித்துவந்த ஏழை மக்களை அவரவர் வீடுகளிலிருந்து விரட்டி அடிக்கிறது; ஆனால், ஆகப்பெரிய ஆக்கிரமிப்பு சாமியார்களான ஜக்கியும் பங்காருவும், அரசு நடவடிக்கைகள் எதுவுமின்றி மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். ❑

# முதலமைச்சர் ஸ்டாலின் கொளத்தூர் தொகுதியில் ஆக்கிரமிப்பு என்ற பெயரில் குடியிருப்பை இடித்து தள்ளியதை இகக(மாலெ) கட்சி வன்மையாக கண்டிக்கிறது

*ஆட்சி மாறியது. பழனிசாமி ஆட்சி போய் ஸ்டாலின் ஆட்சி வந்தது. மக்கள் எதிர்பார்த்தார்கள். நீண்ட நாள் பிரச்சனைகள் தீர்ந்துவிடும் என எதிர்பார்த்தார்கள். இப்பொழுது ஆறுமாதங்கள் கடந்து விட்டன. பத்திரிக்கைகளெல்லாம் பாராட்டின.*

*ஆனால் தமிழகத்தில் கணிசமான மக்களுக்கு குடியிருக்க வீடில்லை. நூற்றாண்டுகளாக குடியிருந்துவரும் சாமானிய மக்களுக்கு பட்டா வழங்கப்படவில்லை.*

*தேர்தல்களின்போது நாங்கள் ஆட்சிக்கு வந்தவுடன் பட்டா வழங்கப்படும். வீடற்றவர்களுக்கு வீட்டுமனை வழங்கப்படும் என்ற வாக்குறுதிகள் இலவசமாகவே வழங்கப்படும். கருணாநிதியும் சொன்னார். ஜெயலலிதாவும் சொன்னார். பழனிசாமியும் சொன்னார். தொடர்ந்து ஸ்டாலினும் சொன்னார். சொன்னதைச் செய்வோம். செய்வதைச் சொல்வோம் என்ற வாய் வீச்செல்லாம் இருக்கும்.*

*இப்போதும் ஸ்டாலின் அதே வழியில்தான் ஆட்சியை தொடரப்போகிறாரா?*

*சென்னையில் ஸ்டாலின் சொந்த தொகுதியான கொளத்தூரில் நடந்த வேதனையான நிகழ்வு மக்கள் நம்பிக்கையை இழக்கச் செய்திருக்கிறது.*

*கொளத்தூர் அவ்வை நகர் பகுதியில் நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் 60க்கு மேற்பட்ட ஆண்டுகள் குடியிருந்து வருகின்றனர். ஒவ்வொரு ஆட்சியிலும் பட்டா வழங்க வேண்டும் என கோரி வந்துள்ளார்கள். ஸ்டாலினே ஆட்சிக்கு வந்து விட்டார் நமக்கு பட்டா வந்துவிடும் என்று நம்பினார்கள். ஆனால் பட்டா வரவில்லை. பட்டாவிற்கு பதிலாக பேரிடிதான் வந்தது.*

*அரசு அதிகாரிகள் இப்பகுதி மக்களிடம், இவ்வழியாக மேம்பாலம் வரப்போகிறது. 14அடி வேண்டும் எனச் சொல்லியதோடு டிசம்பர் 10ந்தேதி ஒரு வாரத்தில் காலி செய்ய வேண்டும் என நோட்டீஸ் கொடுத்துள்ளனர். நோட்டீஸ் கொடுத்த இரண்டே நாளில் பொக்லைனை வைத்து 20க்கு மேற்பட்ட வீடுகளை இடித்து தள்ளிவிட்டனர். வீட்டில் இருந்தவர்கள் இப்போது நடு ரோட்டில் நிற்கின்றனர். அத்தோடு 60க்கு மேற்பட்ட ஆண்டுகள் குடியிருந்து வந்த நூற்றுக்கு மேற்பட்ட வீடுகளை நீர் நிலை ஆக்கிரமிப்பு என்று சொல்லி காலி செய்ய திட்டமிட்டு உள்ளார்கள். ஆட்சியாளர்கள் எப்பொழுதும் வளர்ச்சி என்ற பெயரில் ஏழைகளின் தலையில் மிதிப்பதே வழக்கமாகக் கொண்டிருக்கிறார்கள். நீர்நிலைகளை ஆக்கிரமித்துக் கட்டியுள்ள பெருமுதலாளிகளை காப்பாற்றுவதோடு, ஏழைகள் 60 ஆண்டுகளாக குடியிருந்துவந்த, புறம்போக்கு நிலத்தை நீர்நிலை ஆக்கிரமிப்பு என்று கூறி வெளியேற்றம் செய்யும் ஒரு அரசை, மக்களுக்கான அரசு என்று எப்படி கூறமுடியும். கொளத்தூர் அவ்வை நகர் குடியிருப்பை இடித்ததை இகக(மாலெ) கட்சி வன்மையாக கண்டிக்கிறது. நீண்ட நாட்களாக மக்கள் கோரி வரும் பட்டாவை உடனடியாக வழங்கி அம்மக்களை பாதுக்காக்க வேண்டுமென்றும் வலியுறுத்துகிறது.*

**என்.கே. நடராஜன்**
**மாநிலச் செயலாளர்**
**இந்திய கம்யூனிஸ்ட் கட்சி**
**(மார்க்சிஸ்ட்–லெனினிஸ்ட்) விடுதலை**
**தமிழ்நாடு**

# கள்ளக்குறிச்சியில் அடிப்படை கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம்



◆ *100 நாள் வேலையில் சட்டக் கூலியை முழுமையாக வழங்கிட வேண்டும். குடும்பத்தில் இருவருக்கும் வேலை வழங்கிட வேண்டும்.*

◆ *அங்கன்வாடி கட்டிடத்தை பயன்பாட்டிற்குக் கொண்டு வர வேண்டும்!*

◆ *பள்ளி மாணவர்களுக்கு குடிநீர் கிடைக்க வழி செய்திட வேண்டும்.*

◆ *பள்ளி மாணவர்களுக்கு புதிய பள்ளிக் கட்டிடம் கட்டிக் கொடுக்க வேண்டும்.*

◆ *வீடு இல்லாதவர்களுக்கு வீடு, வீட்டு மனைப்பட்டா வழங்கிட வேண்டும்.*

◆ *வாணாம்பட்டு ஊராட்சியில் துணை சுகாதார நிலையம் கட்டிக்கொடுக்க வேண்டும்.*

◆ *தெருக்களில் உள்ள சிமெண்ட் சாலை குண்டும் குழியுமாக இருப்பதை சீரமைப்பு செய்து சிமெண்ட் சாலை அமைத்து கொடுக்க வேண்டும்.*

◆ *கழிவுநீர் செல்ல தெருக்களின் இருபுறங்களிலும் கழிவுநீர் கால்வாய் அமைத்துக்கொடுக்க வேண்டும்.*

◆ *வாணாம்பட்டு காலனியில் உள்ள நீர்தேக்கத்தொட்டி பழுதடைந்து ஆபத்தான நிலையில் உள்ளது எனவே புதியதாக மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி அதிக கொள்ளவுடன் அமைத்துக்கொடுக்க வேண்டும்.*

◆ *நூலக கட்டிடம் பழுதடைந்து சமூக விரோதிகளின் கூடாரமாக உள்ளதை சீர்செய்து பயன்பாட்டிற்கு கொண்டு வரவேண்டும்.*

◆ *அனைத்து தரப்பு மக்களும் பயன்படுத்தும் சுடுகாட்டுப்பாதையை தார்சாலையாக மாற்றி கொடுக்க வேண்டும்.*

◆ *கிராம நிர்வாக அலுவலர் வேலை பார்க்கும் கிராமத்தில் தங்கி பணி செய்யவதை உறுதி செய்ய வேண்டும்.*

*உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி டிசம்பர் 16, 2021 அன்று கள்ளக்குறிச்சி மாவட்டம், வானாம்பட்டு கிராமத்தில் ஊராட்சி மன்ற அலுவலகம் முன்பு சிபிஐஎம்எல் சார்பாக ஆர்ப்பாட்டம் பகுதிச் செயலாளர் தோழர் ஏழுமலை தலைமையில் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில்*

*இந்நிகழ்வில் கட்சியின் மாவட்ட செயலாளர் தோழர் டி.கலியமூர்த்தி, ஆறுமுகம், எல்லப்பன், காமராஜ், கலாமணி, கந்தசாமி மற்றும் கிளை தோழர்கள், பொதுமக்கள் பலர் கலந்துகொண்டனர்*


**தனி இதழ் ரூ.10 – ஆண்டுச் சந்தா ரூ.150**

மாலெ தீப்பொறி

இப்போதே சந்தாதாரர் ஆகிடுவீர்!

**மாதம் இருமுறை**

**நன்கொடையும் தாரீர்!!**

# குமரியில் பெண் தோழரை காவல் நிலையத்தில் இழிவு படுத்தியதைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்



*09.12.2021 அன்று இரவு ஒரு தோழரின் புகார் மனு மீது குமரிமாவட்டம் இரணியல் காவல்நிலையம் சென்ற கன்னியாகுமரி மாவட்ட சிபிஐஎம்எல் கட்சி நிலைக்குழு உறுப்பினரும் அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழக கன்னியாகுமரி மாவட்ட தலைவருமான தோழர் கார்மல் லூர்துபாயை, புறம்போக்கை ஆக்கிரமித்து ஆக்கர்கடை வைத்திருக்கும் போலீஸ் புரோக்கர் "ஆக்கர் அய்யப்பன்" இரணியல் காவல் ஆய்வாளர் தங்கராஜ் ஆகியோர் இதர காவலர்கள் முன்னிலையில் நாகூசும் வார்த்தைகளால் திட்டியுள்ளார்கள். கம்யூனிஸ்ட் கட்சியின் பெண் தலைவரை அவமானப்படுத்தியது மட்டுமின்றி காவல் நிலையத்தில் குற்றவாளி பாதுகாக்கப் படுகிறான் தோழர் கார்மலை பாலியல் ரீதியாக வார்த்தைகள் பேசி அவமானப்படுத்திய ஆக்கர் அய்யப்பன் மீது வழக்கு பதிவு செய்து கைது செய்யப்பட வேண்டும். அதை வேடிக்கை பார்த்துக் கொண்டு குற்றவாளிக்கு ஆதரவாக நடந்துகொண்ட இரணியல் காவல் அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி 13.12.2021 மாலை கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் இகக(மாலெ) மாநிலச் செயலாளர் தோழர் என்.கே.நடராஜன், மாவட்டச் செயலாளர் தோழர் அந்தோணிமுத்து, மனிதநேய ஜனநாயக கட்சி மாவட்ட துணைத்தலைவர் தோழர் முஜீப் மற்றும் சிபிஐ(எம்எல்) சிவப்பு நட்சத்திரம் கட்சியின் மாவட்டச் செயலாளர் தோழர் மணவை கண்ணன் ஏஐசிசிடியு மாவட்டத் தலைவர் ஐயப்பன் கண்டன உரை ஆற்றினார்கள் சிபிஐ(எம்எல்) மாவட்ட குழு தோழர்கள் சுசீலா, கணபதி, ஜெகன், அர்ஜுனன், அனிற்றா பிரின்சி, தேவரவி, எஸ்டின், ரவி, அன்பரசு, சுதன், வேலாயுதபெருமாள், சுமன் உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர். ஆர்ப்பாட்டத்தினைத் தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் சில நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார். புறம்போக்கை ஆக்கிரமித்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.*

## தஞ்சை கபிஸ்தலத்தில் இகக(மாலெ)யில் இணைந்த தோழர்கள்



# நீதிக்கான அனைத்திந்திய வழக்கறிஞர்கள் சங்கம் ஒருங்கிணைப்பாளர்கள் கூட்டம்




நீதிக்கான அனைத்திந்திய வழக்கறிஞர்கள் சங்கத்தின் தேசிய அளவிலான ஒருங்கிணைப் பாளர்கள் கூட்டம் 2021 டிசம்பர் 18, 19 தேதிகளில் பெங்களூருவில் நடைபெற்றது. தமிழ்நாடு, கேரளா, மேற்கு வங்கம், பீகார், ஜார்கண்ட், உத்தரப்பிரதேசம், டெல்லி மற்றும் கர்நாடகாவிலிருந்து வழக்கறிஞர்கள் கலந்து கொண்டனர். நீதிக்கான அனைத்திந்திய வழக்கறிஞர்கள் சங்கம் உருவாவதற்கான விதை தமிழ்நாட்டில் போடப்பட்டது. இன்று நாடு முழுவதும் பத்து மாநிலங்களில் அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. கொடுமையான கோவிட் –19 முதல் காலக்கட்டத்தில் ஆன் லைன் மூலமாக முதல் கூட்டம் தமிழ்நாட்டில் நடத்தப்பட்டது. பின்னர் நாடு தழுவிய அளவில் வழக்கறிஞர்கள் கலந்து கொண்ட ஆன் லைன் கூட்டமாக நடத்தப்பட்டு சங்கம் உருவாக்கப்பட்டது. பெங்களூருவில் நடந்த இந்தக் கூட்டம்தான் முதன் முதலாக நடத்தப்பட்ட தோழர்கள் நேரடியாக கலந்து கொண்ட கூட்டம் ஆகும். வழக்கறிஞர்கள், சட்டக் கல்லூரி மாணவர்கள் என 45 பேர் கலந்து கொண்டனர். 2022 மே மாதம் 28,29 தேதிகளில் கொல்கத்தாவில் முதல் அகில இந்திய மாநாட்டை நடத்திடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கு முன்பாக நாடு முழுவதும் அமைப்பை விரிவுபடுத்திட, உறுப்பினர்கள் சேர்ப்பு நடத்துவதும் மாநில மாநாடுகளை 2022 மார்ச் மாதத்திற்குள் நடத்திடவும் வழக்கறிஞர்கள், வழக்கறிஞர் எழுத்தர்கள், சட்ட மாணவர்கள் உள்ளிட்டோரின் கோரிக்கைகள் மீது பிரச்சார இயக்கங்கள், போராட்டங்களை மேற்கொள்வது எனவும் தீர்மானிக்கப்பட்டது. இந்தக் கூட்டத்தில் தமிழ்நாட்டில் இருந்து வழக்கறிஞர்கள் ஜோதிபாசு, அதியமான், ஜி.ரமேஷ் ஆகியோர் கலந்து கொண்டனர். ஜனவரி மாதத்தில் தமிழ்நாட்டில் மாநில ஒருங்கிணைப்பாளர்கள் கூட்டத்தை நடத்தி அடுத்த கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது. ❑

# தஞ்சையில் இகக(மாலெ) மறியல் போர்

தஞ்சை மாவட்டம், பாபநாசம் ஒன்றியம், கணபதி அக்ரஹாரம் பகுதியைச் சுற்றியுள்ள கிராமங்களில் 10 ஆண்டுகளுக்கும் மேலாக பெண்கள், பள்ளி கல்லூரி மாணவர்கள் பேருந்து வசதியில்லாமல் சிரமப்படுகின்றனர். அந்தப் பகுதி மக்கள் பலமுறை அதிகாரிகளை சந்தித்து மனு அளித்தும் எந்த நடவடிக்கையும் எடுக்காத நிலையில் சிபிஐஎம்எல் கட்சியின் சார்பாக கணபதி அக்ரஹாரத்தில் மறியல் போராட்டம் 18.12.2021 அன்று நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து போக்குவரத்துத் துறை அதிகாரிகள், காவல்துறை அதிகாரிகள் கலந்து கொண்டு பாபநாசம் தாசில்தார் முன்னிலையில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. அதில் இரண்டு வழிதடங்களில் பேருந்து விடவேண்டுமென்று போராட்டக்குழு வைத்த கோரிக்கையை ஏற்று ஒரு வழிதடத்தில் அன்றைய நாளில் இருந்தே இயக்குவதாகவும் மற்றொன்றை ஒருமாதகாலத்திற்க்குள் இயக்குவதாகவும் உறுதியளித்தனர். பேச்சுவார்த்தையில் சிபிஐஎம்எல் கட்சியின் மாவட்டச் செயலாளர் கண்ணையன் மற்றும் மாவட்டப் பொறுப்பாளர்கள் முன்னணியினர் கலந்துகொண்டனர். ❑

# நையாண்டியும் சிரிப்பும் அடிப்படை உரிமை

## தோழர் மதிவாணன் வழக்கில் சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்பு


இகக(மாலெ) மதுரை மாவட்டச் செயலாளர் தோழர் சி.மதிவாணன் தன்னுடைய முகநூல் பதிவில் தன்னுடைய மகள் மற்றும் மருமகனுடன் சிறுமலை மலையில் எடுத்த புகைப்படங் களைப் போட்டு "துப்பாக்கிப் பயிற்சிக்காக சிறுமலை பயணம்" என்று வேடிக்கையாக பதிவிட்டதற்கு மதுரை வாடிப்பட்டி போலீஸ் அவர் மீது, அரசுக் கெதிராக போர் தொடுக்கத் திட்டமிட்டதாகச் சொல்லி இந்திய தண்டனைச் சட்டம் 120பி, 122, 505(1)(பி) மற்றும் 507 பிரிவுகளில் வழக்கு பதிவு செய்து அவரைக் கைது செய்து சிறையிலடைக்க நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போது வாடிப்பட்டி நீதித்துறை நடுவர் திரு. அருண் அவரை சிறையிலடைக்க மறுத்துவிட்டார். அதன்பின்னர் மதிவாணன் மீது போடப்பட்ட வழக்கை தள்ளுபடி செய்யக் கோரி சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கறிஞர் ஹென்றி திபேன் அவர்களால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. அந்த Crl OP(MD)No.18337 of 2021 மற்றும் Crl MP(MD)No.10063 of 2021 வழக்கில் 17.12.2021 அன்று நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் அவர்களால் எப்ஐஆர் தள்ளுபடி செய்யப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டது. ஒரு குற்றத்தை நிறுவ நான்கு கட்டங்கள் உள்ளன. 1) எண்ணம் 2) தயாரிப்பு 3) முயற்சி 4) செய்து முடித்தல் ஆகியன இருக்க வேண்டும். இந்த வழக்கில் அவர் தன்னுடைய மகள் மற்றும் மருமகனுடன் போட்டோ எடுத்துப் போட்டு "துப்பாக்கிப் பயிற்சிக்காக சிறுமலை பயணம்" என்று முகநூலில் தன் பதிவுக்குத் தலைப்பிட்டார் என்ற ஒரே காரணத்திற்காக வாடிப்பட்டி போலீஸ் இவர் மீது மேற்கண்ட பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்துள்ளது கேலிக்கூத்தானது என்று நீதிபதி குறிப்பிட்டுள்ளார்.

மேலும் தன்னுடைய தீர்ப்பில், இந்த நிலையில் "அரசியலமைப்புச் சட்டத்தை இயற்றியவர்கள் அடிப்படைக் கடமைகளில் சிரிக்கும் கடமைகளையும் சேர்த்திருப்பார்கள். புரட்சியாளர்கள் அவர்கள் நிஜப் புரட்சியாளர் களாக இருந்தாலும் சரி செல்பேசிப் புரட்சியாளர் களாக இருந்தாலும் சரி பொதுவாக அவர்களி டத்தில் நகைச்சுவை உணர்வு என்பது இருக்காது. ஒரு மாறுதலுக்காக மதிவாணன் வேடிக்கை பண்ண முயற்சித்தி ருக்கிறார். அதுவும் இது அவரின் முதல் முயற்சியாகும். வாடிப்பட்டி போலீஸ் இதை ஒரு வேடிக்கையாக ஜோக்காக எடுத்துக் கொள்ளவில்லை. மனுதாரர் அரசுக்கெதிராக போர் தொடுக்கத் தயாராகிறார் என்று நினைத்துவிட்டது. எதில் சிரிப்பு? அது ஒரு காத்திரமான கேள்வி. ஏனென்றால், வாரணாசி முதல் வாடிப்பட்டி வரை நாம் புனிதப் பசுக்களை மேய்த்துக் கொண்டிருக் கிறோம். அவற்றைப் பார்த்து வேடிக்கை செய்ய யாருக்கும் தைரியம் வராது. புனிதப் பசுக்களுக்கு ஒரே அட்டவணை கிடையாது. அது இடத்திற்கு இடம் மதத்திற்கு மதம் மாறுபடும். ஒரு பசு உணவின்றி மெலிந்து இருந்தாலும் யோகியின் ராஜ்யத்தில் அது புனிதமானது. குஷ்வந்த் சிங் பாடம் கற்றுக் கொண்ட தாகூர் மேற்கு வங்கத்தின் அடையாளச் சின்னம். என்னுடைய தமிழ் தேசத்தில், எக்காலத்திற்குமான பகுத்தறிவு பகலவன் பெரியார் ஈ.வே.ராமசாமி ஒரு அதிபுனிதப் பசு. இன்றைய கேரளாவில் மார்க்ஸ், லெனின் விமர்சனத்திற்கும் நக்கலுக்கும் அப்பாற்பட்டவர்கள். அதுபோல் மகாராஷ்டிரா வில் சத்திரபதி சிவாஜியும் வீர் சாவர்கரும் இதுபோன்று விமர்சனமும் நையாண்டியும் செய்யப்பட முடியாதவர்கள். ஆனால், ஒட்டுமொத்த இந்தியாவிற்குமான ஒரே புனிதப் பசு ஒன்று உள்ளது. அது 'தேசப் பாதுகாப்பு' என்று குறிப்பிட்டுள்ள நீதிபதி, மனுதாரர் மதிவாணன் இகக(மாலெ) கட்சியின் முக்கிய மான நிர்வாகி என்றும் சிபிஐ(எம்எல்) இப்போது தேர்தல்களில் போட்டியிடும் வெளிப்படையாகச் செயல்படும் அமைப்பு என்றும் குறிப்பிட்டுள் ளார். அதுமட்டுமின்றி, காகிதப் போராளிகள் தங்களை சுதேசி சே குவாராக்கள் என்று கற்பனை செய்து கொள்வதற்கு உரிமையுள்ளது என்று நையாண்டியும் செய்துள்ளார்.

கடந்த சில தினங்களுக்கு முன் சங்கி யுடியுப் போராளி மாரிதாஸின் மீது போடப்பட்ட வழக்கை மூன்றே நாளில் தள்ளுபடி செய்தது இதே நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன்தான் என்பதும் குறிப்பிடத்தக்கதும் கவனத்தில் கொள்ளத்தக்கது மாகும். இந்தத் தீர்ப்பு காவல் துறைக்கு கொடுக்கப்பட்ட சம்மடி அடியாகும்.

**– ரமேஷ் கணபதி**

# தோழர் செ.கணேசலிங்கனுக்கு செவ்வணக்கம்!



உலகம் முழுவதும் உள்ள தமிழர்கள் மத்தியில் நன்கு அறியப்பட்டவர் ஈழத் தமிழ் மார்க்சிய எழுத்தாளர் செ.கணேசலிங்கன். வர்க்கப்போர், உலகமயமாக்கம், முதலாளித்துவம், பெண்ணுரிமை, அடித்தட்டு மக்கள் வாழ்க்கை, சாதியாதிக்கம், சாதி ஒழிப்பு, சமத்துவம் எல்லாவற்றைப் பற்றியும் தன்னுடைய எழுத்துக்கள் மூலம் எல்லாரிடமும் கொண்டு சென்றவர் செ.கணேசலிங்கன். 1928 மார்ச் 9 அன்று இலங்கை யாழ்ப்பாணம் உரும்பிராயில் பிறந்த கணேசலிங்கன் தனது 93வது வயதில் 2021 டிசம்பர் 4 அன்று சென்னையில் காலமானார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி 1949 ஆம் ஆண்டு இந்திய அரசால் தடைசெய்யப் பட்டது. அப்போது தோழர் ப.ஜீவானந்தம் தோணி மூலம் கோடியக்கரை வழியாக யாழ்ப்பாணத்திற்குச் சென்றார். செ.கணேசலிங்கனும் குலவீர சிங்கமும் தோழர் ப. ஜீவானந்தத்தை அழைத்துக் கொண்டு உரும்பிராய் கிராமத்திற்குச் சென்று அக்கிராமத்தில் தீண்டாமை ஒழிப்பு குறித்து தாழ்த்தப்பட்ட மக்கள் வாழும் பகுதியில் கூட்டம் நடத்தினர். அக்கூட்டத்தில் தோழர் ப. ஜீவானந்தம் உரையாற்றினார். அவருடைய முதல் நாவல் நீண்ட பயணம். 71 நாவல்கள், 7 சிறுகதைத் தொகுப்புகள், 22 கட்டுரைத் தொகுப்புகள் எழுதி யுள்ளார். ஓர் அரசியலின் கதை, அன்னிய மனிதர்கள், அடைப்புகள், சடங்கு, போர்க் கோலம், மண்ணும் மக்களும், இரண்டாவது சாதி, கோடையும் பனியும் அவர் நாவல்களில் சில. மான்விழிக்கு எழுதிய கடிதம், குந்தவிக்கு எழுதிய கடிதம், நல்லவன், சங்கமம், ஊமைகள், காதல் உறவல்ல பகைமை உறவு, ஒரே இனம், கொடுமைகள் தாமே அழிவதில்லை இவைசெ.கணேசலிங்கன் சிறுகதைகளில் சில. பெண்ணடிமை தீர, கலையும் சமுதாயமும், அழகியலும் அறமும், பல்சுவைக் கட்டுரைகள் உள்ளிட்ட கட்டுரை நூல்களையும் நவீனத்துவமும் தமிழகமும், பகவத் கீதையும் திருக்குறளும், கனவுகளின் விளக்கம், குறள் கூறும் பாலியல் கோட்பாடு, மாக்கியவல்லியும் வள்ளுவரும், பெண்ணியப் பார்வையில் திருக்குறள், சித்தர் சித்தாந்தமும் சூபிசமும், அர்த்த சாஸ்திரமும் திருக்குறளும் முதலிய ஆய்வு நூல்களையும் தமிழுலகிற்குத் தந்துள்ளார். 'திரும்பிப் பார்க்கிறேன்' என்ற சுயசரிதை நூலையும், சில பயணக் குறிப்புகள் அமெரிக்கா, இங்கிலாந்து என்ற பயண நூலையும் எழுதியுள்ளார். செ.கணேசலிங்கனின் இறப்பு மார்க்சிய உலகிற்கும் தமிழ் உலகிற்கும் பேரிழப்பாகும். தோழர் செ.கணேசலிங்கனுக்கு மாலெ தீப்பொறி செவ்வணக்கம் செலுத்துகிறது.

# தோழர் சங்கரநாராயணன் 6ஆம் ஆண்டு நினைவேந்தல்



மார்க்சிய-லெனினிய சிந்தனையாளரும் நெல்லை மாவட்டத்தில் இகக(மாலெ) கட்சியைக் கட்டமைத்தவர்களுள் ஒருவருமான மறைந்த தோழர் எஸ்.சங்கர நாராயணன் அவர்களின் 6ம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்ச்சி 14.12.2021 அன்று பாளையங்கோட்டையில் நடை பெற்றது.

நிகழ்ச்சியில் தோழர் சுப.உதயக்குமார், பேராசிரியர் சோமசுந்தரம், பிரபாகிருஷ்ணன் வழக்கறிஞர் கு.பழனி, ஆசிரியர் சங்கரநாராயணன், காஞ்சனை மணி, தொ.ப.விஜயலெட்சுமி, சிந்து, சேகர், வழக்கறிஞர் ஜி.ரமேஷ், ஆர்ஒய்ஏ தலைவர் சுந்தர்ராஜ் ஆகியோர் உரையாற்றினார்கள். ❑

MALAE THEEPORI. Registered with Registrar of NewsPaper for India TN/TAM/2002/12013
Posted on 24.12.2021 at Egmore RMS/1 Patrika Channel Regn No:TN/CCN/368/2021-2023
Published on 1st and 16th of every month R.DIS: 2804/17 Licensed to Post WPP TN/PMG/(CCR)/WPP-436/2021-2023

## இலவச ஆடு வழங்கக் கோரி... கச்சகட்டி முற்றுகை



## பேருந்து கேட்டு மறியல் போர்... தஞ்சாவூர்



## ஊராட்சி மட்ட மனு கொடுக்கும் போராட்டம்... புதுக்கோட்டை




Owned and Published bys; S.Balasundaram from 1/10, 11th street, Karunanidhi Nagar, Ayanavaram, Chennai - 600023
Printed by R.Murugan at Print Point, 10, Pulipone Bazar 2nd Lane, Triplicane, Chennai - 600005. Editor G.Ramesh